பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க.



வருட சந்தா முன் பணம்	...	ரூ 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,,	...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, பிரபவ-ஸ்ரீ சித்திரை-மீ 5உ (17—4—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 51.

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வ்யாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவார்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த்தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்

கைகண்ட மருந்து. கேட்டால் இனும்.

விலாசம்:— மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:— T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ், வடக்கு சித்திரைவீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ முகம்மது க்ாசிம் & கம்பெனி, கிள்ளாங், பினங், சிங்கப்பூர்.

வேதங்கள்.

திருவாளர் தி. கோ. காந்திமதிநாதம் பிள்ளை அவர்கள் எழுதுகிறார்.

வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு வகைப்படுமென்றும் அவைகள் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டனவென்றும், அவைகள் ஆரிய மொழியிலேயே கடவுளால் திருவாய் மலர்ந்தருளப்பட்டவைகளென்றும் நம் நாட்டு மக்களிற் பெரும்பாலர் எண்ணுகின்றார்கள்.

இவ்வாறு எண்ணி வருகின்ற கொள்கைகள் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றனவாகக் காணப்படவில்லை. அவ்வாறு ஒப்புக்கொள்ளப்படாமைக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்வாம். வேதங்கள் நான்கேயென்பதைப் பற்றியாவது அதற்கு மேற்பட்டு வேதங்கள் பல வென்பதைப்பற்றியாவது அதிகமாக ஆராய வேண்டாம். வேதங்கள் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டவைகளா? அல்லது கடவுள் அருள் வழி நின்ற நிறை மொழி மாந்தர்களால் உண்டாக்கப்பட்டவைகளா? என்பதைப்பற்றி ஆராய்வோம். உண்டாக்கப்படுவது என்னும் சொல்லுக்குப் பொருள் கடவுள் முன் இல்லாத ஒன்றைப் புதுவதாகத் தோற்றுவிக்கிறார் என்பதல்ல; முன் உள்ள ஒன்றை வேறு வேறு வகையில் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கின்றார் என்பதுதான் உண்மைப் பொருள். மக்கள் வசிக்குந் தக்க உடம்பு, கருவி, இடம், நுகர் பொருள் இவைகளை அமைத்துக் கொடுப்பது எல்லாம் வல்ல ஆண்டவன் படைப்புத் தொழிலாகும். உயிர்களும் ஆண்டவனைப் போல் எப்பொழுதும் உள்ளவைகளே தான். உயிர்களையும் ஆண்டவனையும் போல உலகமும் உள்ள பொருளே தான். தோன்றியும் நின்றும் அழிந்தும் வருகின்ற நிலைமையைப் பற்றி உலகமும் உயிரும் புதுவதாக உண்டாக்கப்பட்டவைகளென்று கொள்ள வேண்டுவதில்லை. உயிர்களுக்கு ஏற்ப உலகத்தைப் பலவகைப் படுத்தி வசதிகள் செய்கின்ற பொழுது மக்களைப் போல வாய்ப்புடன் ஆற்றல்கள் அடங்கிக் கடவுள் படைப்புத் தொழிலைச் செய்கின்றார் என்பதில்லை.

ஆண்டவர் இவைகளனைத்தையும் நினைப்பு மாத்திரத்திலேயே நிகழச் செய்கின்றார் என்றும், அல்லது அவர் பார்வையிலேயே இவையனைத்தும் நிகழ்கின்றனவென்றும், அறிவாளர் கருதுகின்றார்கள். நம் நில உலகத்தில் வாய்ப்புகளுக்கு உட்பட்டுத் தொழில்கள் செய்கின்ற கர்த்தாக்களைப் போல் அல்லாமல் கடவுள் தான் விரும்பிய வண்ணமே மக்களுக்கு வேண்டிய எல்லாத் தொழில்களையும் செய்கின்றார்.

இத்துணை மேம்பட்ட கடவுள் மக்களுக்கு அறிவுச் சட்டம் ஒன்று இன்றியமையாது வேண்டப்படும் என்று நினைத்தால், முன்னுள்ள உலகப் பொருளை உடம்பு, கருவி, இடம், நுகர் பொருளாகத் தம் நினைப்பு மாத்திரத்தில் எவ்வாறு ஆக்கிக்கொடுத்தாரோ, அதுபோல் அவர் உயிர்களுக்கு உள்ள இயற்கை அறிவை அவைகளுக்கு வேண்டிய வசதிக்குத் தக்கபடி விளக்கப்படுத்துவதும். அவர் தம் நினைப்பு மாத்திரத்தில் நிகழ்வித்துக் கொள்ள முடியாத ஓர் அரிய செயல் அல்ல.

இனி எந்த வேதங்களைக் கடவுள் உண்டாக்கினார் என்று சொல்லி வரப்படுகின்றதோ அவைகளின் வரலாற்று முறையை ஆராயுமிடத்து அவைகள் எழுதப்பட்ட புத்தக உருவில் அமைந்து வெளிப்பட்டனவாகத் தோன்றவில்லை. மக்களின் காதுவழியாக முன்னுள்ளவர் சொல்வதைப் பின்னுள்ளவர் கேட்டுக்கேட்டு நெஞ்சத்தில் நிறுத்தி வந்த வகையில், மக்கள் நினைவிலேயே வேதங்கள் இருந்து பயிலப்பட்டு வந்தனவாகக் காணப்படுகின்றன. இந்த முறையைப்பற்றி மேலே சென்றால் கடவுளும் தம் வாயினாலேயே வேதங்களைச் சொன்னவராகக் கருதப்பட்டு வருகின்றதேயன்றி எழுதப்பட்ட புத்தக உருவில் வேதங்கள் அமைத்துக் கொடுக்கப்படவில்லையென்பது சொல்லாமலே போதரும்.

கடவுள் திருவாயில் நின்றும் வேதங்கள் வெளிப்பட்ட காலத்தில் எந்த மக்கள் அவைகளைக் கேட்டுத் தங்கள் உள்ளத்தில் ஒரு சிறிதும் குறைவு படாமல் வாங்கி வைத்திருந்தார்கள்? என்று கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் காண்கின்றில. அன்றியும் இங்கு குறிக்கத்தக்கதொன்றுண்டு. அது என்னவெனில் வேதங்களிலேயே வேதங்களைச் செய்த 'கிரந்தகர்த்தாக்களின்' பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. வேதங்கள் கடவுளாலேயே அருளிச் செய்யப்பட்டவைகள் என்று சொல்பவர்கள் வேதங்களின் பல பகுதிகளை ஆக்கியோர் பெயர்கள் அங்கங்கே குறிக்கப்பட்டு வருவதற்கு என்ன சமாதானம் கூறுகின்றார்கள் என்பதைப்பற்றி ஆராய்தல் வேண்டும். வேதங்கள் இந்தக் கிரந்த கர்த்தாக்களின் பரம்பரையிலேயே ஓதப்பட்டு வந்தனவென்றும் அவர்களின் பெயர்களை [illegible]மாக ஆக்கியோர் பெயர்களாகக் குறிக்கப்பட்டனவென்றும் சொல்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் சொல்லிவருவது வேதங்களை இறைவன் வாய்மொழி யென்று சொல்லி வருகிற கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கேயன்றிப் பிறிதில்லை. இனி வேதங்கள் முன்னைய காலத்தில் எழுதப்படுதற்கு இல்லாமலும் பிற்காலத்தில் எழுதப்பட்ட புத்தக உருவில் அமைத்துக் கொள்ளவும் ஏற்பட்டுவிட்டன. எழுதப்படாத காலத்தெல்லாம் இறைவன் வாய்மொழியாகிய வேதங்கள் மக்கள் மனநினைவென்னும் புத்தகத்தில் தங்கிக்கிடந்தன. அவைகள் பிற்காலத்தில் மனநினைவென்னும் புத்தகத்தைவிட்டுப் பெயர்ந்து இருடியார் எழுதிய புத்தக உருவங்களில் வெளிப்பட்டன. இடையில் இன்னும் ஒன்று நினைக்கத்தக்கது. அதாவது வியாச பகவான் வெளிப்பட்டுச் சிதறுண்டு கிடந்த வேதங்களைப் பொறுக்கிச் சேர்த்துத் தொகை நான்காக ஆக்கி இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற புதுப் பெயர்களால் வேதங்களை வெளிப்படுத்தியதாகவும் புராணங்களைப் பயின்ற பெரியோர்கள் கூறுகின்றார்கள். வேதவியாசர் தொகுத்த நான்கு வேதங்களும் இருடிகள் வாயில் வாய்மொழியாக வந்த வேதங்களும், இறைவன் மக்கட்கு முதன் முதல் திருவாய் மலர்ந்தருளியதாகச் சொல்லப்படும் வேதங்களும் எல்லாம் வேறுபாடு ஒரு சிறிதுமின்றி ஒத்தப்பிரதிகளே என்று எப்படிக் கூற இயலும். எல்லாம் வல்ல இறைவன் எழுதிய புத்தக உருவிலேயே வேதங்களை அருளியிருப்பாரானால் வேதங்கள் சிதறுண்டு கிடக்கவும், அவைகளைப் பின் ஒருவர் தோன்றி வேதப் பெயர்களையே மாற்றிக் கொடுக்கவும் இடம் இல்லாமல் இருந்திருக்கும். இது நிற்க.

இனி வேதங்கள் இறைவனால் அருளப்பட்டது உண்மையே என்றால் இவைகள் கட்டளை உரைகளாக "இது செய்க இது செய்யற்க" என்ற வகையிலாவது அல்லது உலகு, உயிர், கடவுள், கட்டு, வீடு என்பனவற்றின் இயல்புகளை விரித்து ஓதுகின்ற தத்துவ நூல்களாகவாவது மட்டும் இருக்க வேண்டும். இந்தத் தன்மைகளோடு ஆண்டவனை நோக்கி வழிபடும் வணக்கப்பாடல்களும் அவ்வேதங்களிற் காணப்படுமானால் வேதங்களைச் செய்த கடவுளே எந்தக் கடவுளை நோக்கித் தம் குறைவு தீர்தற்கு வணங்கினார் என்று வினவுதற்கு இடமாகும் அன்றோ? வேதங்களுள் வணக்கப்பாடல்கள் காணப்படுமானால், வேதங்களை இறைவன் செய்ததாகச் சொல்வது எவ்வாறு பொருந்தும்? மக்கள் தம் குறைவுகளைச் சொல்லி ஆண்டவன் அருள் பெறுவதற்காகப் பாடுகின்ற பாட்டுக்கள் மக்கள் வாய்மொழிப் பாட்டுக்களேயாமல்லது வேறு கடவுள் பாட்டென்று எங்ஙனம் கூற இயலும்? ஆகவே வேதங்கள் கடவுள் அருள் வழி நின்ற பெரியோர்களாகிய நிறைமொழி மக்கள் வாய்மொழி யென்று கொள்ள வேண்டுவதல்லது கடவுள் வாய்மொழி என்று கொள்வதற்கு இடமில்லை.

இனி உலகியல் முறையில் அரசர்களது கட்டளைச் சட்டங்கள் எவ்வாறு வெளிப்படுகின்றன வென்பதைச் சிறிது கூர்ந்து நோக்கத்தக்கது. அரசர் அதிகார வியாபகத்துள் அடங்கி நிற்கும் பெருமக்களே மக்கட்கு வேண்டிய சட்டங்களைத் தாமே ஆராய்ந்து உண்டு பண்ணி அரசர்களின் ஒப்பம் பெற்று அச்சட்டங்களையே அரச சட்டங்களாக வெளிப்படுத்துகின்றனர் என்பது எவரும் நன்கு அறிதல் கூடும்.

பெருமக்களால் ஆராய்ந்து உண்டு பண்ணப்பட்ட சட்டங்கள் அப்பெருமக்கள் பெயரால் வெளிவாராது, அரசர் பெயராலேயே வெளிவருகின்ற உண்மையை அறிபவர்கள் வேதங்கள் கடவுளாலேயே ஆக்கப்படல் வேண்டுமென்பது இன்றியமையாததாகக் கருதமாட்டார்கள். உலகத்திற்காகக் கடவுள் தாம் செய்கின்ற எல்லாத்தொழில்களையும் தம்மால் அதிகாரம் பெற்ற ஆன்மாக்களைக் கொண்டே செய்விக்கின்றார் என்பது அருள் நூல்களின் கருத்தாகும். இந்த உலகத் தொழில்கள் சம்பந்தப்பட்டவரையில் தாமே கர்த்தாவாக இருந்து எந்தத் தொழிலும் செய்கின்றார் என்று சொல்லுவதற்கிடமில்லை. இந்த உலகத்தில் உள்ளவர்கட்கு வேண்டிய அறிவுச்சட்டங்களை அக் கடவுள் தம் அருளைப் பக்குவப்பட்ட ஆன

[இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க]

பிள்ளைப்பேறும் ராமேஸ்வர யாத்திரையும்.

(கைவல்லிய சாமியார் எழுதுகிறார்)

இராமேஸ்வரத்திற்கு யாத்திரை போவதிலும், சமுத்திர ஸ்நானம் செய்வதிலும், சுவாமி தெரிசனம் பண்ணுவதிலும், வழியிலுள்ள பட்டணங்களின் காட்சியைக்கண்டு களிப்பதிலும், ஆட்சேபணையில்லை. உங்கள் பாவம் போவதற்கும் பிள்ளைபேருண்டாவதற்கும் நீங்கள் செய்யும் கிரியைகளும், உங்களிடம் நிர்ப்பந்தித்து வாங்கும் தெட்சணையும், உங்கள் நம்பிக்கைக்குத் தகுந்தபடி உங்களை ஏமாற்றிவாங்கும் தானங்களும் பிரயோஜனப்படாதென்பதுமட்டுமல்லாமல் உங்கள் குடும்பங்களுக்கும் தோஷமென்றதினால் இதை வற்புறுத்திச் சொல்லுகிறேன். எந்த சாஸ்திரத்தைக்கொண்டு இந்த கிரியைகள் வற்புறுத்தப்படுகிறதோ அந்த சாஸ்திரத்தைக்கொண்டேநானுஞ் சொல்லுகிறேன். உங்கள் புத்தியில் ஆலோசித்துப்பாருங்கள். புத்திக்குச் சரியென்றுபட்டால் உடனே புரட்டும் ஏமாற்றும் ஞாயமில்லாமையுமானதை விட்டுவிடுங்கள். இப்பேர்ப்பட்ட பிரயோஜனமில்லாததுமானதும், ஒருபலனையும் கொடுக்காததும் குடும்பத்தில் பாவம் நிறையும்படியானதுமான கர்மங்களைச்செய்து ஏழ்மை நிலைமையையடைந்து ஒன்றுமேசெய்யச் சக்தியற்று அவகிப்படும் குடும்பங்கள் அநேகத்தைப்பார்க்கிறோம் இது வழக்கமாய் விட்டது. இராமேஸ்வரம் போனால் இதையெல்லாம் செய்யாமல் எப்படி வருகிறதென்று பதில் சொல்லுவது ஞாயமாகாது. நல்லது, கெட்டதைத் தெரிந்து சரியானதை உடனே செய்கிறவனுக்குத்தான் மனிதனென்று பெயர், அப்படிச்செய்கிறவன் அறிவாளியெனப்படுகிறான். இதைச் செய்யாத மனிதனுடைய பரம்பரையும், சமூகமும் அன்னியனுடைய காலடியால் அடிமையாக இருக்கவேண்டுவதுதான். நமது மௌடீகமும் அடிமைத்தலைவிதியும் தானே நாம் இந்த உலகத்தில் கண்டபலன்?

எவ்வித இன்பத்தையும், வைபவத்தையும் உடையவர்களாயிருந்த போதிலும் இல்லற இன்பத்தின் ரகசியம் புத்திரபாக்கியமென்பது சரியே. சம்போகம்கிரமமாக நடந்தாலும் சந்தானமிலாதிருப்பதற்கு அநேக காரணங்களுண்டு. ஜனேந்திரியங்களில் இயற்கையாயமைந்த உருப்புகளின் கெடுதல்களால் உண்டாகக்கூடியமல்டும், கெர்ப்பப்பையில் வாய்வு, தசைவளர்தல், இரத்தக்கட்டு, உஷ்ணம் பழைய மேகரோகம் முதலிய வியாதிகளும் காரணங்களாம். ஆண்களுக்கும் சில வியாதிகளினால் மலட்டுத்தன்மை வாய்க்கிறது. குழந்தை இல்லாதிருப்பதற்குக் காரணம் தங்கள் ஜனேந்திரியங்களில் உண்டாயிருக்கும் நோய் என்றறியாமல், தங்களை சுக தேகியென்று பாவித்து ஈஸ்வரசித்தத்தால் அல்லது விதிவசத்தால் தமக்குபுத்திர பாக்கியமில்லை என்று எண்ணி புத்திர பாக்கியத்திற்குக்கோவில் முதலிய க்ஷேத்திர யாத்திரைகளும், குளம் புஷ்கரணி, நதி முதலிய தீர்த்த யாத்திரைகளும் செய்கிறார்கள். சேலம் ஜில்லா சங்ககிரியின் ஒரு சிகரத்திற்கு வரடிக்கல் என்று பெயரிருக்கிறது. பிள்ளையில்லாதவர்கள் அதைச் சுற்றுவார்கள். அந்தப் பாறையைச் சுற்றிலும் ஒரு அடியே இடமிருக்கும், கீழே பெரும் பள்ளம், அதைச்சுற்றி அநேகர் அதில் விழுந்துமாண்டுபோனார்கள். இப்பொழுது ராஜாங்கத்தார் அதைச்சுற்றப்படாதென்று அடைத்துவிட்டார்கள். மலையை சுற்றுவதாலும், கோவிலுக்குப்போவதாலும், யாத்திரை போவதாலும் ஏதோ தேகத்தின் மாறுதல் உண்டாகி கெர்ப்பப்பை நல்ல நிலைமையை அடைந்தாலும் அடையலாம். கெட்டுப்போன பார்ப்பானுக்கு பணத்தை பல தானமென்று வாரிக்கொடுப்பதால் ஜனனேந்திரியங்கள் செம்மைப்படுமோ? இராமேஸ்வர யாத்திரை செய்தால் குழந்தை உண்டாகும் என்று இந்து சாஸ்திரத்தில் எங்கேயாவது சொல்லியிருக்கிறதா? இராமேஸ்வர யாத்திரை செய்யுங்கள் குழந்தை உண்டாகும், அவர்கள் செய்தார்கள் உண்டாயிற்று. இவர்கள்செய்தார்கள் உண்டாயிற்று என்று பார்ப்பான் சொல்லிச்சொல்லி அதுவே பிரமையாக நமக்குள் வியாபித்து விட்டது. போதாக்குறைக்கு சோதிடனும் கூட்டுவாங்குகிறதால் இப்பார்ப்பனனும் சமயம் கிடைத்தபொழுதெல்லாம் வற்புறுத்துகிறார்கள் [illegible] விவாகமாகி இரண்டுமூன்று வருடத்தில் குழந்தை உண்டானதாகச் சொல்லுவதுமுண்மையே. கலியாணமாகி மூன்றுநான்கு வருடத்திற்குப் பிறகே சிலருக்குக்குழந்தை உண்டாவதும்வழக்கமாயிருக்கிறது இராமேஸ்வரத்திற்குப் போய் சமுத்திர ஸ்நானம் செய்து கடவுளை வழிபட்டு காட்சிகளை கண்டு களித்து வருகிறவர்கட்கு, கடவுள் ஆசிர்வதிக்கட்டும். அந்த தானமென்றும், பிராமண சமாராதனையென்றும், பிதுர்கர்மமென்றும். சங்கல்பமென்றும் உங்களை ஏமாற்றி நீங்கள் செலவு செய்யும் பணம் பாழாவதுமல்லாமல் உங்கள்குடும்பத்தின் உயர்வும் கெட்டுவிடுமென்பதுநான்சொல்லுவதல்ல, ஸ்மிருதியின் விதியுமிதுவே. உங்கள் தர்மமெல்லாம் சிறிதுகூட ஒழுக்கமில்லாத பார்ப்பானுக்கே போய்ச்சேருகிறதென்பதை நீங்கள் உணரவில்லை. எசர்கா தானஞ்செய் தென்பதை நீங்கள் கவனிக்கிறீர்களா? தண்ணியிலாத பொட்டலில் போடும் விதை விளைந்து வருமென்று நீங்கள் நினைப்பீர்களா? தஞ்சாவூர் ராஜாங்கத்தின் சத்திரம் இனியும் இராமேஸ்வரத்தில் தர்மம் செய்கிறது அவர்கள் வம்சமெங்கே? காலம் சென்ற திருவனந்தபுரம் ராஜாவும் இராமேஸ்வரம் யாத்திரை செய்து பார்த்து விட்டுத் தான் சுவீகாரம் செய்தார் மைசூர்மகாராஜாவும் யாத்திரை செய்தவரே இதனால் குழந்தையிலாதிருப்பதற்கு இனியும் சிலகாரணமிருக்குமென்பது வெளியாகவில்லையா? அநேகமாகப் பணக்காரர்களுக்குத்தான் குழந்தை இல்லாத ஆடம்பரம் பெரிதாக இருக்கிறது. விடய ஆசையாலும் வியாதியாலும் முன் அவர்கள் பெரியவர்கள் ஏழை குடும்பங்களை தொந்தரவு பண்ணி பிள்ளை குட்டிகள் பட்டபரிசாபத்தின் சாபமும் காரணமாயிருக்கலாம், வியாதிக்கு வைத்தியமும் பாவ பரிகாரத்திற்கு ஏழைப் பிள்ளைகளுக்குச் சோறும் கல்வியும் தொழிலும் தன்னால் இயன்றமட்டும் உண்டு பண்ணுவது பரிகாரமே ஒழிய ஒழுக்கம் கெட்டுப் போயிருக்கும் பாப்பானுக்குக் கொடுப்பது பிரயோஜனப்படாது. நாகர் பிரதிஷ்டையைப் பற்றியும் பிதிர்கர்மங்களைப்பற்றியும் முன்னமே எழுதியிருக்கிறேன். ஈசுவர விசாரத்திலும் மதக்கிரியைகளிலும் நான் விஸ்வாசமுடையவன். ஆனால் அவை தப்பாகவும் வெளிச்சடங்காகவும் பணம் செலவிடப் படாமல் நல்ல மார்க்கமாக சாஸ்திரத்தின் கருத்துப் பிரகாரம் பிரயோஜனத்தை உண்டுபண்ணும் தருமத்தில் செலவிடப் பட்டால் செய்தவர்கட்கு நன்மை என்னும் கொள்கை உடையவன்.

விஷயம் தெரியாதவர்களின் தூண்டுதலால் அநேக குடும்பங்கள் இராமேஸ்வர யாத்திரை என்னும் சங்கல்பத்தை உண்டு பண்ணிக் கொண்டு யாத்திரை அசௌகரியங்களால் தடைபட்ட குடும்பத்தில் ஏற்படும் கஷ்டத்திற்கெல்லாம் யாத்திரை முடிவு பெறாததே காரணமென்று நிச்சயம் பண்ணி கடன் வாங்கியோ அவசியமான சில விர்கு வைத்திருக்கும பணத்தைக் கொண்டோ யாத்திரைக்குப் போய் ஞாயமில்லாமல் பணத்தையெல்லாம் செலவு செய்து தருக்கல செய்யும் பரட்டிற்கு பணம் பசாவிட்டால் குருக்களிடமே கடன் வாங்கி வந்து பணத்திற்கு கஷ்டப்படுகிறவர் அநேகர். இராமேஸ்வரத்தில் ஒரு பார்ப்பான் எத்தனை பேருக்குக் கிரியை செய்ய வேண்டியிருக்கிறது. ஒருவன் கையில் தர்ப்பையைக்கொடுக்கிறான் ஒருவன் கையில் தர்ப்பை மோதிரம் போடுகிறான், மற்றொருவனை கையில் எள்ளைக் கொடுக்கிறான் பின்னொருவனுக்கு பூணூல் போட்டு அங்கு சிந்திக்கிடப்பதை பணமொடு இரண்டு கையிலும் வாரிக்கொள்ளச் சொல்லுகிறான், இன்னொருவன் கையில் வெற்றிலையை தட்சணையை எடுத்துக்கொள்ளச் சொல்லுகிறான் இவர்களெல்லாம் பிதிர்க்களையும் தேவர்களையும் சுவாமியையும் சமுத்திர ராஜனையும் திருப்தி செய்வதற்காக அந்தந்த தேவர்கட்கும் கர்மங்கட்கும் சம்பந்தமுடைய மந்திரத்தை புரோகிதன் சொல்ல ஆரம்பிக்கிறான். ஒருவனுக்கு முதலடி மற்றொருவனுக்கு முதலும் கடைசியும் விட்டொருவனுக்கு சொல்லி வருகையில் தரகன் வந்து விடுகிறான். "தஞ்சாவூர் மிராஸ்தார் வந்து விட்டார் நம்ம பெரியண்ணா ஆளும் சின்னமாமா ஆளும் எவ்வளவோ பெரட்டிப் பார்த்தார்கள் நான் ஒரேயடியாக அடித்துக்கொண்டு வந்து விட்டேன் எங்கே இறங்குகிறது நீங்களும் வந்து முகத்தைக் காட்டிவிட்டு வந்து விட்டீர்களானால் நல்லது' என்கிறான். அதற்கு அவன் "கொஞ்சம் வேலையிருக்கிறது இந்த இனவையெல்லாம் துலைத்து விட்டு வந்து விடுறேன்" என்று அவனை அனுப்பி விட்டு மறுபடியும் அவசர அவசரமாக முன்னிற்குப் பின் வாயில் வந்ததையெல்லாம் மந்திரமாகச் சொல்லுகிறான். ஒருவன் தகப்பன் பேரும் வேறொருவன் தாய் பேரும் மற்றொருவன் தகப்பன் பேரும் இன்னொருவன் தாய் பேரும் அவன் பாட்டன் பேரும் இவன் பாட்டிபேரும் எல்லாம் கலந்து மாற்றி மாற்றிச் சொல்லுகிறான். இதுதான் மந்திரம் சொல்லுவதும் இப்படியா என்று கர்மம் செய்து கொள்ளுகிறவர்கள் நினைக்கிறார்கள் இச்சமயம் இன்னொரு தரகன் வந்து "பின் வீட்டைத்திறந்து விடமாட்டேன் என்கிறார்கள் மதுரைக்காரருக்கு இடமில்லை" என்கிறான். "நாசமாய்ப் போச்சுபோ எத்தனை இளவிற்குத்தான் நான்மாரடிக்கட்டும் நேற்றே அவர்கட்கு எல்லாஞ் செய்து துலைத்தேனே இன்னம் என் தலைவலியில்லை இரண்டு காசு கிடைக்கையில் தானே இந்த தொல்லை. அவன் வீடு நாசமாகப் போகட்டும் போ இதோ நான் வந்து அவர்கட்குச் சொல்லுகிறேன்" என்று அவனிடம் சொல்லிவிட்டு கோபத்தோடு மந்திரம் ஆரம்பிக்கிறான். அந்தசமயம் புரோகிதர் சப்தத்தை இருப்பதும் அழுத்துவதும் பார்த்தால் [illegible] வீரமும் விசேஷமாயிருக்கும். கோபத்திலே தர்ப்பையை அங்கேபோடு பூணூலை எடுத்தெறி அங்கே உட்காரு எங்கே தட்சணை எடு என்று எல்லாம் கோபத்தோடே நடக்கும் இதெல்லாம் சரியல்லவென்றே படுகிறது. பார்ப்பான் எப்படி இருந்தாலுமிருக்கட்டும் நமக்குத்தான் பொறுமை வேண்டும். நம்முடைய குருட்டு மூட நம்பிக்கை அவன் செய்யும் அக்கிரமத்தை மன்னித்து விடுகிறது. இந்த விதமன்றோ அனுஷ்டியமாய் மந்திரமும் கிரியைகளும் நடந்தும் அதனால் பலன் உண்டாகுமென்றும் இந்த சாஸ்திரம் இடம் கொடுத்திருக்கிறது என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் அந்தசாஸ்திரத்தை அவமதித்தவர்களாவீர்கள்.

மந்திரிகளின் பரிதாப நிலை.

"திரு. சத்தியமூர்த்தியின் விதவைத் தன்மை"

என்பது பற்றி

திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியாரவர்கள் சௌந்திர மஹாலில் பேசியதின் சாராம்சம்.

தலைவரவர்களே! சீமாட்டிகளே சீமான்களே!

திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயரவர்களின் உருக்கமானதும் தெளிவானதுமான பிரசங்கத்தின் பின்னர் நான் என்ன பேசப் போகிறேன் என்பது எனக்கே விளங்கவில்லை. ஆதலால் நான் ஏதோ சுருக்கச் சொல்லுவதன் மூலம் எனக்கிருக்கும் உற்சாகத்தை மட்டுப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். இம்மாகாண சரித்திரத்தில் தற்சமயம் நமது மாகாண சட்டசபையில் நடந்து கொண்டு வருகிற அசம்பாவிதமானதும் மிக்க விசனிக்கத்தக்கதுமான நாடகம் இது வரையில் நடந்ததே இல்லை. இனி எப்பொழுதும் இம்மாதிரி நடவாதிருக்குமென்று நம்புகிறேன். சற்று சட்ட சபைக்குள் நுழைந்து பார்ப்போம். சட்டசபை மேடையை அணுகுவோமேயானால் இடது புறமாக மூன்று கனவான்களிருக்கிறார்கள். அவர்களுள் இடையிலிருக்கும் கனவானைப்பற்றி ஒன்றும் சொல்லாமலிருக்க முடியவில்லை. அக்கனவான் உலகத்தைத் துறந்த உத்தமர் போல் வெள்ளாடை பூண்டு, இடுப்பைச் சுற்றிலும் நீலநிறக் கயிற்றைக் கட்டியிருக்கக் காணற்பாலது! அப்பெரியார் நம வீற்றிருக்கும் இருவரும் ஆக மூவருந் தான் நமது மாகாண மந்திரிகள்! அவர்கள் மூவரும் உத்தமர்கள் தான். எனக்கு அவர்களிடம் மெத்த மதிப்புண்டு. ஆனால், அவர்களால் சுமக்க முடியாத பாரமாகிய மாற்றப் பட்ட இலாக்காக்களின் ஆட்சியாம் பெரிய மூட்டையை அந்தோ! இவர்கள் தாங்க வேண்டியதாயிருக்கிறது! இந்த எதிர்பாராது வந்த பாரத்தைத் தாங்க அவர்களுக்கு என்ன பலம் இருக்கிறது? அப்புறம் பதினெட்டு பேர் அடங்கிய பெரிய கட்சியாரால் தாங்க முடியுமா? இப்பதினெண்மர்களும் தேர்தலுக்கு முன் எங்கிருந்தார்கள்? அவர்களுடைய யோக்கியதை என்ன? அவர்கள் ராஜீய விவகாரத்தில் தற்குறிகளாயிருந்தவர்கள். அவர்கள் இந்த கட்சியிலும் அந்த கட்சியிலுமில்லாமல் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருந்தார்கள் (சிரிப்பு) மந்திரி சபை அமைப்பின் போது இந்த 13 கெல்லிக்காய்களும் அவசரமாகவும் கட்டுபடலாகவும் ஒன்று சேர்க்கப்பட்டன என்பதை நீங்களெல்லோரும் அறிந்திருக்கிறீர்கள். தேர்தலுக்கு முன்னால் ஒழுங்கு கட்டுப்பாடான கட்சியின் சார்பாய் நின்றதாகச் சொல்ல முடியாத இந்த சிப்பாய்களின், தைரியமும், வீரமும் காண இன்று இவர்களுக்கும் முடி சூட்டியிருக்கிறது!

அநாமதேயப் பேர்வழிகள் மந்திரி பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மூன்று கனவான்கள் பேரிலும், நான் ஒன்றும் குறை சொல்லவில்லை, ஏனெனில் சீக்கிரமாகவோ சற்று காலந்தாழ்த்தோ, இம்மூன்று மந்திரிகளும், தங்கள் சுற்றத்தைக் காக்கவே உணர்ந்து அறிவும் வாய்ப்பெற்று நம்முடன் வந்து கலந்துகொள்ளப் போகிறார்கள் என்பது நிச்சயம். (கைதட்டல்) அவர்களைக் கண்டு தலைவிதிக்கும் அவர்களின் பரிதாப நிலைமைக்காக நாம் இரங்குவோமாக!

இச் சட்டசபையில் இடது புறம் காணும் காட்சி இதுவென்றால் வலது புறம் காணும் கண்காட்சியைச் சற்று நோக்குவோம். (சிரிப்பு) அதுவும் அவலட்சணமான காட்சியாயிருக்கிறது. அங்கு வீற்றிருப்பவர்கள் தான் பெரும் பேர்படைத்த சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் என்பவர்கள். தேர்தலுக்கு முன் இவர்கள் செய்த ஆர்ப்பாட்டங்களும், தேர்ந்தெடுத்தால் என்னென்ன சாதிப்பதாக வீட்டுக் கூரைகளின் மேல் நின்று கொக்கரித்தார்கள் என்பது நீங்களெல்லோரும் அறிந்த விஷயம். இரட்டை ஆட்சியை ஒழிக்கப் போகிறதாகவும், அந்த மந்திரி சபையை புடை உடைத்துப் போடுவதாகவும், சபதம் செய்யவில்லையா? இப்போது அவர்கள் மெஜாரிட்டி கட்சியார்களாய் ஜெயம் பெற்று விட்டார்கள். வந்து செய்த வேலை என்ன? மூன்று பொம்மைகளைத் தங்கள் காலத்திற்குத் தக்கபடி ஆடும் மூன்று வேஷக்காரர்களை மந்திரிகளாய் அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் சாதகமெங்கே? அவர்கள் அடங்க கதியைச் சற்று உற்று நோக்குங்கள்! நண்பர் திருவாளர் முனுசாமி நாயுடு அவர்கள் சொன்னது போல் ஒரு காலத்தில் கர்ஜித்த சிங்கங்களெல்லாம் கொஞ்சுங்கிளிகளாக மாறி விட்டன! என்னே ஏமாற்றம்! என்னே ஏமாற்றம்! நமது ஜஸ்டிஸ் மந்திரிகளை வாயில் வந்தபடி காரணம் கொஞ்சமும் இல்லாமலும் திட்டிய துர்நாற்ற வாய்களெல்லாம் இப்போது அடைபட்டு விட்டன (சிரிப்பு) அவர்கள் வாயில் என்ன அடைக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றவில்லை! (சிரிப்பு) 500 மைலுக்கப்பாலிருந்து வருவதால் சென்னை மாநகரில் என்னென்ன புதுமைகள் நடக்கின்றன என்பதை அறிய அசக்தனாயிருக்கிறேன். ஆதலால் சென்னை வாசிகளாகிய சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் ஊமைகளாகப்போவதற்குக் காரணமாக அவர்கள் வாயில் அடைக்கப்பட்டிருக்கும் வஸ்து என்ன என்பதைக் கண்டு பிடித்துச் சொல்வீர்களா? (பெருஞ் சிரிப்பு)

சென்னை யுனிவர்சிடி அங்கத்தினர் சத்தியமூர்த்தி, என் நண்பர் திருவாளர் முனிசாமி நாயுடு அவர்களை 'கடைசி ரோம தேசத்தவர்' என்று சொன்னார். அதற்கு என்ன அர்த்தம் என்பது எனக்கு விளங்கவில்லை. எதற்கில்லாவிட்டாலும் மிஸ்டர் சத்தியமூர்த்தியின் ஆங்கில பாஷா ஞானத்தில் எனக்கு கொஞ்சம் மதிப்பிருக்கிறது. சத்தியமூர்த்தி சொன்னதற்கு என்ன அர்த்தமாயினும், கடைசி ரோம தேசத்தவர் திருவாளர் முனிசாமி நாயுடு தாய் நாட்டிற்காக எவ்வளவோ நற்காரியங்களை செய்துள்ளார். இனி ஒரு நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. இனி அவருக்கு வரப்போகும் பெருமைகள், கீர்த்திகள், அதிகாரங்கள் உத்தியோகங்கள் கன்னியங்கள் மூலமாக அவர் வேறொன்றும் தம் நாட்டார்களுக்கு நன்மை செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி ஆனால் கடந்த வாரத்தில் சட்டசபையில் அப்பெரியார் செய்த ஒரு வேலைக்காக மட்டும் நாமெல்லோரும் என்றும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளோம் (கைதட்டல்) அவர்தான் "நம்பிக்கை இல்லை" என்ற சத்திய தீர்மானத்தைக் கொண்டு வந்த பெரியார். (கைதட்டல்) சித்தூர் அங்கத்தினர்கள் தான் 'நம்பிக்கை இல்லாத தீர்மானம்' கொண்டு வரும் பாக்கியம் பெற்றார்கள் என்று சொல்லப்பட்டது. (சிரிப்பு) ஆனால் இதற்கு முன்னால் கொண்டு வந்த சித்தூர் அங்கத்தினர் போலல்லாது, என் நண்பர் முனிசாமி நாயுடு தான் கொண்டு வந்த தீர்மானத்தின் நோக்கத்தில் பூர்ண ஜெயமடைந்துவிட்டார். இப்பொழுதிருக்கும் மந்திரிசபையில் "நம்பிக்கையில்லை" என்பதை உலகத்தார் அறிய வேண்டுமென்பதற்காக அவர் தீர்மானம் கொண்டு வரவில்லை "நம்பிக்கை இல்லை" என்பதைச் சொல்லத்தேவையே இல்லை. (பெருஞ் சிரிப்பு) மந்திரிகளிடத்தில் யாருக்கும் நம்பிக்கையில்லை (சோகத்தைப் போல் சிரிப்பு) யாருக்காவது தங்களிடம் நம்பிக்கை இருப்பதாக மந்திரிகளே சொல்லுவதில்லையே! ஏன்? மந்திரிகளுக்குள்ளேயே நம்பிக்கை இருப்பதாகவாவது அவர்கள் சொல்லுவதில்லையே! (சிரிப்பும் கைத்தட்டலும்) நம்பிக்கை இல்லை என்பதை வெளியாக்க வேண்டுமென்பது என் நண்பரின் நோக்கமல்ல அவருடைய எண்ணமெல்லாம் சுயராஜ்யக் கட்சிக்காரரின் அயோக்கியத்தனத்தை உலகறியவேண்டும் என்பதாகும். அதில் அவர் பூர்ண வெற்றி பெற்றுவிட்டார். (கேளுங்கள் கேளுங்கள்)

நமது நண்பர் தற்கால முதல் மந்திரியிடம் வேறெது இருந்தாலும் இல்லாவிட்டாலும் இரண்டு முக்கிய மேம்பட்ட குணங்கள் இருக்கின்றன. அவையாவன தைரியம் கண்டிப்பு! இவ்விரண்டு மேம்பட்ட குணங்களையும் மந்திரியவர் வேண்டாதபோது காட்டாமலும் இருந்து வருவதில் மிகவும் கெட்டிக்காரர் (சிரிப்பு) "நம்பிக்கை இல்லை" என்ற தீர்மானத்தின் போது மந்திரியவர் தம்முடைய தைரியத்தை வெளியிட்டார். அந்த வீரம் புத்தியுள்ளதா அன்று என்ப

[இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க]

வாலாஜாபாத் ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கும் எம். கே. ரெட்டியாருக்கும் உபசாரப்பத்திரம்.

ஸ்ரீமான் எம். கே. ரெட்டியார் செங்கல்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக வாலாஜாபாத் மகாஜனங்களால் ஒரு பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ் விழாவுக்கு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை அக்கிராசனம் வகிக்கக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரும் சம்மதித்தார். ஏப்ரல் மாதம் 10ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஏ. ராமசாமி முதலியார், ஜெ. எஸ். கண்ணப்பர், எம். கே. ரெட்டியார், டி. வி. சுப்பிரமணியம், சி. ஜயராம் நாயுடு, செங்கல்பட்டு போர்டு வைஸ் பிரசிடெண்டு ஆகிய கனவான்கள் சென்னையில் இருந்து மோட்டார் வழியாக வாலாஜாபாத் வந்து சேர்ந்தார்கள். மற்றும் பொன்னேரி, செம்பியம், ஸ்ரீ பெரும்பூதூர், செங்கல்பட்டு, காஞ்சீபுரம், சைதாப்பேட்டை முதலிய இடங்களிலுள்ள சேர்மென்களும் சில போர்டு மெம்பர் பிரசிடெண்டு மற்றும் பெரிய மனிதர்களும் சுமார் 100 பேருக்கு மேலாக வாத்தியங்களுடனும் கொடிகளுடனும் தொண்டர்களுடனும் ஊருக்கு வெளியில் இருந்தே வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஊர் முழுவதும் பச்சை தோரணங்களாலும் வாழைகளாலும் அலங்கரிக்கப்பட்டதோடு வீடுகள் தோறும் ஆரத்தி கற்பூரம் தேங்காய் உடைத்தல் முதலியவைகளுடன் மிகவும் உற்சாகமாகவும் பக்தியாகவும் வரவேற்கப்பட்டு இங்கு பாடசாலைக்கு அழைத்துச் சென்று அங்கு சிற்றுண்டி வழங்கப்பட்டதும் அடியும் வாத்தியங்களுடன் பாலாற்று மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு சுமார் 1500 பேர்வரையிலும் அதாவது பெண்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்பவர்களும் மற்றும் எல்லோருமாக கூடியிருந்தார்கள். ஸ்ரீமான் நாயக்கரை அக்கிராசனம் வகிக்குமாறு பிரேரேபித்து ஸ்ரீமான் நாயக்கருக்கும் ரெட்டியாருக்கும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டதும் ஸ்ரீமான் ரெட்டியாரால் அதற்கு மறுமொழி சொல்லப்பட்டது. அது சமயம் ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் இதுவரை தான் ஜில்லா போர்டில் செய்த வேலையையும் இனி செய்யப்போகும் வேலையையும் பற்றி பேசி நன்றி செலுத்தினார். அதில் கிராம சீர்திருத்தமும் போக்குவரவுப் பாதை சவுகரியமும்தான் பிரதானமாய் செய்யப்பட்டிருப்பதை சொன்னார். அடுத்தாப்போல் ராமசாமி நாயக்கர் முகவுரையாக இரண்டொரு வார்த்தைகள் சொல்லி அதாவது, ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் இது வரை செய்த வேலைகளையும் செய்யப் போகும் வேலைகளையும் பற்றி சொன்னது தமக்கு மிகுந்த திருப்தி அளிக்கிறதென்றும், இவ்வளவு வேலைகள் அவர் செய்திருந்தாலும் தற்கால பார்ப்பன அகராதிப்படி அவர் பெரிய தேசத்துரோக ஜாப்தாவில் சேர்க்கப் பட்டிருக்கிறார் என்றும் தமிழ் நாட்டில் உள்ள சுமார் 9 பார்ப்பனரல்லாத ஜில்லா போர்டு மெம்பர்களில் இரண்டு ஜில்லா போர்டு மெம்பர்கள் தான் "தேசத் துரோகிகள்" என்று சொல்லப்படுகிறார்கள் என்றும், அவர்கள் செங்கல்பட்டு போர்டு ஸ்ரீமான் ரெட்டியாரும் தஞ்சாவூர் போர்டு ஸ்ரீமான் பன்னீர் செல்வமும் ஆவார்கள் என்றும், ஸ்ரீமான் பன்னீர் செல்வத்தைவிட ஸ்ரீமான் எம். கே. ரெட்டியாரே அதிகமான அதாவது பிராயச்சித்தமே இல்லாத "தேசத் துரோகி" என்றும் ஸ்ரீமான் பன்னீர் செல்வம் தன்னுடைய ஆட்சியில் பல பார்ப்பனருக்கு உத்தியோகம், சோறு, படிப்பு, முதலியவைகள் கொடுக்கிறார் என்றும், இவர் அடியோடு மறுக்கிறார் ஆதலால்தான் பெரிய "தேசத் துரோகியாகி" விட்டார் என்றும் அப்படிப்பட்ட தேசத்துரோகியை பாராட்டும் கூட்டத்திற்கு தேசத் துரோகிகளுக்கு உபாத்தியாயரான ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் பேசப் போவதும் மிகவும் பொருத்தமானதென்றும் இப்படியான 'தேசத்துரோக கூட்டத்திற்கு' சமீபகாலம் வரை "தேசபக்தராக பார்ப்பனர்களாலும்" "தியாக மூர்த்தியாகவும்" "தேசாபிமானச் சிங்கமாகவும்" அழைக்கப்பட்டுவிட்டு திடீரென்று தேசத் துரோகியாகிவிட்ட நான் அக்கிராசனம் வகிப்பதை மிகப் பெருமையாக நினைக்கிறேன் என்றும், நான் ஸ்ரீமான் ரெட்டியாரவர்களிடம் எதிர்பார்ப்பதெல்லாம் இந்தப் பதவியும் அவருக்குள்ள ராவ் பகதூர் பட்டமும் போவதாயிருந்தாலும் அன்றி நரகமே கிடைப்பதாயிருந்தாலும், இப்பொழுது அவர் பார்ப்பனர்களால் தேசத்துரோகப் பட்டம் வாங்கியிருப்பதை மாற்றி, பார்ப்பனர்களால் தேசபக்த பட்டம் வாங்க முயற்சிக்கக் கூடாது என்றும், உண்மையாய் தேசத்துக்கும் சமூகத்திற்கும் உழைக்கும் மனிதர்களைக் கண்டுபிடிக்க ஒரே ஒரு மார்க்கத்தைத் தான் கையாடி வருவதாகவும், அது என்னவென்றால் நமது நாட்டில் யார் யார் பார்ப்பனர்களால் தேசபக்தர் தேசபக்தசிகாமணி என்று அதாவது விபீஷணனைப் போல பார்ப்பனர்களால் கொண்டாடப்படுகிறார்களோ அவர்கள் எல்லோரும் ஒருவர் கூட பாக்கியில்லாமல் தெரிந்தோ தெரியாமலோ தேசத்திற்கும், நமது சமூகத்திற்கும் கெடுதி செய்த பெரிய துரோகிகள் என்றும் யார் யார் பார்ப்பனர்களால் தேசத் துரோகி என்றும் வகுப்புவாதிகள் என்றும் வகுப்புத் துவேஷக்காரரென்றும் காங்கிரஸ் விரோதி என்றும் சொல்லப்படுகிறார்களோ அவர்கள் கூடுமானவரை உபயோகமுள்ளவர்கள் என்றும் தான் முடிவு செய்வதற்காகவும் சொன்னதோடு ஸ்ரீமான் ரெட்டியாரவர்களிடம் போர்டு பிரசிடெண்ட் முறையில் தான் இனியும் எதிர்பார்ப்பது என்னவென்றால் ரெட்டியார் ஆட்சிக்கு உட்பட்ட பள்ளிக்கூடங்களில் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களையே வேலைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் அதனால் கொஞ்சம் அதிகப் பணம் செலவானதானாலும் கல்வி கற்பிப்பது தாமதப்பட்டாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களைக் கொண்டே நமது பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கப்பட வேண்டும் என்றும் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களை தயாரிக்க ஒரு பள்ளிக்கூடம் ஒவ்வொரு ஜில்லா போர்டும் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் அதற்காகத் தக்கபடி பணம் ஒதுக்க வேண்டும் என்றும் முகவுரையாகச் சொல்லி ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியாரைப் பேசும்படி கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சிக் குறிப்புப்படி அவர் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்.

A. ராமசாமி முதலியார் பேசியதாவது.

அக்கிராசனாதிபதியே! சகோதரர்களே!

நான் இந்த ஜில்லா வாசிகளால் சட்டசபை அங்கத்தினர் பதவிக்கு தெரிந்தெடுக்கப்பட்டவனானாலுடைய [illegible] களுக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் காண்கிறேனோ அவ்வளவு அதிகமான சந்தோஷத்தை [illegible] இந்த தேர்தலில் நான் ஜெயித்திருந்தால் என்னைப் போல் ஒருவர் சட்டசபையில் உட்கார்ந்து கொண்டு ஒரே ஒரு 100 பேர்களுடன் வீண் விவாதங்கள் பேசிக்கொண்டிருப்பேன். அந்த வாதத்தால் உங்களுக்கு, எந்தவிதமான நன்மையும் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இப்போது சில நாட்களில் தினம் 100-பேருடன் பேசுவதற்கு பதிலாய் தினம் 3000 பேருடன் 30000 பேருக்குப் என் 30000 பேருக்கும் தெரியும்படியாகவும் உபயோகப்படும்படியாகவும் பேசி வருகிறேன். என்னுடைய பேச்சையும் வேலையையும் எவ்வளவு தூரம் அடக்கி விடவேண்டுமென்று நமது எதிரிகள் நினைத்தார்களோ, அதற்கு நேர் விரோதமாய் முன்னிலும் ஆயிரமடங்கு செய்ய கடவுள் சவுகரியம் கொடுத்துவிட்டார். அது தான் எனது தோல்வி. அல்லாமலும் இரட்டை ஆட்சியை சர்க்காருக்கு நடத்திக்காட்டி தேசத்திற்கு இன்னும் அதிகப்படியான சீர்திருத்தம் பெறலாம் என்கிற எண்ணத்தின் பேரில் எங்களால் கூடியவரை அதை நடத்திக்காட்டினோம். அதோடு கூடவே அரசியல் விஷயத்திலும் எல்லா வகுப்பினருக்கும் சரிசமமான சந்தர்ப்பத்தையும் உரிமையும் கொடுக்கவேண்டும் என்றும் முயன்று வந்தோம். இதை வகுப்புவாதமென்று சொல்லி வந்தார்கள். ஆனால் இந்த இரண்டு காரியத்தில இரட்டை ஆட்சியை நடத்திக் காட்டும் வேலையை அவர்கள் ஒப்புக்கொண்டதோடு எல்லோருக்கும் சம உரிமை அளிக்கும் விஷயத்தில் மாத்திரம் தங்கள் வகுப்புக்கே அளிக்கும் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள்.

இரட்டை ஆட்சி.

இரட்டை ஆட்சியை திருப்தியாய் நடத்திக்காட்ட இப்போது எங்களை விட அதிகமாய் சுயராஜ்யக் கட்சியாரே முனைந்து எங்கள் வேலையை அவர்கள் ஏற்றுக்கொண்டதால்

காலை சட்டசபையை ஒழித்தால் ஆட்டையாட்சிக்கும் கொஞ்சமும் ஆபத்து ஏற்பட்டுவிடவில்லை. அல்லாமலும் பாமர ஜனங்களுக்கும் நாங்கள்தான் இரட்டையாட்சிக்கு தூண்களாயிருப்பது போலும் நாங்கள் எங்களுடைய தாங்குதலை எடுத்துவிட்டால் அது உடனே இடிந்து விழும் என்றும் இடியா விட்டாலும் சுயராஜ்யக்கட்சியார் இடித்துத் தள்ளிவிடுவார்கள் என்றும் நம்பி இருக்கும் நம்பிக்கையை தப்பு நம்பிக்கை என்று எடுத்து காட்டவும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நாங்கள் எங்கள் தாங்குதலை அடியோடு பின் வாங்கிக்கொண்டோம் ஆனால் அந்த இடத்தில் இடிப்பதாகச் சொன்ன சுயராஜ்யகட்சியார் தாங்குதல் தான் பலமாக இருந்துவருகிறது. இரட்டை ஆட்சியை ஒழிக்கும் விஷயம் தான் இப்படி என்றால்,

வகுப்பு வாதம்.

இப்போது நமது தோல்வியால் வகுப்பு வாதம் ஒழிந்ததாகச் சொல்வது எப்படி இருக்கிறது என்று பாருங்கள்

முன்னிலும் அதிகமாக பலப்பட்டுவருகிறது.

வகுப்பு வாதத்தை ஒழிக்கும்கட்சியாகிய சுயராஜ்யக்கட்சிக்கு மாகாண தலைவர் தேர்தல் நடந்தது சுமார் 30 அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். ஒரு பார்ப்பனரும் ஒரு பார்ப்பனரல்லாதாரும் அந்தஸ்தானத்திற்கு போட்டி போட்டார்கள். அங்குள்ள 14 பார்ப்பனர்கள் பார்ப்பன அபேக்ஷகருக்கு ஓட்டு செய்தார்கள் 16 பார்ப்பனரல்லாதார் பார்ப்பனரல்லாத அபேக்ஷகருக்கு ஓட்டு செய்தார்கள்

அகில இந்திய சுயராஜ்யக்கட்சி தலைவர் தேர்தலின் யோக்கியதையை கொஞ்சம் கவனித்துப்பாருங்கள். ஸ்ரீமான் மோதிலால் நேரு தலைவர், ஸ்ரீமான் சீனிவாசயங்கார் உபதலைவர், ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் காரியதரிசி, கடைசியாக அக்கட்சிக்கு கொரடாவாக இருக்க ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரி எவ்வளவோ பாடுபட்டும் ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பெயரை அங்குள்ளவர்கள் பிரேரேபித்தார்கள். உடனே ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியைப்பிடித்தது தலைவர் ஸ்தானமும் சென்னை மாகாணத்தாருக்குக்கொடுக்கப்பட்டது என்கிற அபவாதம் சென்னைக்கு வந்துவிடும் ஆதலால் வேறு ஒரு மாகாணத்தாரை நியமியுங்கள் என்று சொல்லச் செய்தாராம். உடனே வேறு மாகாணத்தார் ஒருவர் எழுந்து சென்னை மாகாணத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்பு வித்தியாசங்கள் இருப்பது இப்போது நன்றாய்த் தெரிந்து விட்டது: ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார் போன்றவர்களை பிரேரேபிக்கும் போது M.K. ஆச்சாரியார் பிரஸ்தாபப்படும் போதும் சென்னைக்கு இல்லாத அபவாதம், ஷண்முகம் செட்டியார் பேர் வரும்போதுதானா ஏற்படவேண்டும் என்று இவரை பரிகாசம் செய்தாராம். மற்ற மெம்பர்களும் இந்த சபையிலேயே அவர் ஒருவர்தான் புத்திசாலித்தனமாய் பேசுகிறார். அபேக்ஷகர்களையே சென்னை பார்ப்பனர் இப்படி செய்யும்போது மற்றவர்களை அவர்கள் எவ்வளவு கொடுமை செய்யமாட்டார்கள் என்று சொல்லி கட்டாயம் அவர் இருக்க வேண்டும் என்று சொல்லி தெரிந்தெடுத்தார்கள். இதுதான் வகுப்பு வாதம் ஒழிந்த தன்மையாம்.

சம்பளமில்லாத உத்தியோகத்திற்கே வகுப்பு வாதத்தை ஒழித்த யோக்கியதை இப்படி இருந்தால் சம்பளமுள்ள உத்தியோகத்திற்கு எப்படி இருக்கும்? வகுப்பு வாதம் ஒழித்த மந்திரிகளின் யோக்கியதையையும் ஒரு சிறிது யோசித்துப் பாருங்கள்.

சித்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஒரு நாயுடு கனவான். ஆனால் அவர் தேடிப்போடு மெம்பர் காலி ஸ்தானங்கள் இரண்டிற்கு இரண்டு கனவான் பெயரை சிபார்சு செய்தார். அதில் ஒருவர் அய்யங்கார் கனவான் மற்றவர் கோமுட்டி செட்டியார் கனவான். அப்படி இருந்தும் மந்திரி என்ன செய்தார் என்று பாருங்கள் அய்யங்கார் கனவானின் பெயரை ஏற்றுக்கொண்டு செட்டியார் கனவானின் பெயரை அடித்துவிட்டு அந்த ஸ்தானத்திற்கு இன்னமும் ஒரு அய்யங்காரை ஏன் சிபார்சு செய்யவில்லை என்று கேட்டு அய்யங்காரை சிபார்சு செய்யும்படி திரும்பி அனுப்பிவிட்டார். இதுதான் வகுப்பு வாதமற்ற மந்திரி தன்மையாம். சரி இனி வகுப்பு வாதம் கூடாது என்கிற சுயராஜ்ய சபை மெம்பரின் யோக்கியதையை கொஞ்சம் கேளுங்கள் நாம யாருக்காவது ஒரு பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுத்தால் அது அதிகார துஷ்ப்பிரயோகம், வகுப்பு துவேஷம் ஆகிவிடுகிறது. ஆனால் சட்ட மெம்பர் சர். சி. பி. அய்யர் செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டுக்கு பப்ளிக் பிராசிகியூட்டர், கவர்மெண்ட் பிளீடர் என்கிற இரண்டு வேலைக்கு ஒரு அய்யர் ஒரு அய்யங்கார் ஆகிய இரண்டு பேரையே நியமித்தார் அவர்களை தங்களுக்குள் சரியானபடி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்துக் கொண்டார்கள். ஆனால் நம்மை அதில் சேர்த்தால் வகுப்பு தேசத் துரோகமாய் விடுகிறது. நமக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்றால் குதிரை கீழே தள்ளினதுமல்லாமல் குழியும் பறித்தது என்பது போல் வேலை கொடுக்காமல் போனதல்லாமல் என்றென்றைக்கும் வேலைக்கு லாயக்கில்லாமல் செய்யத் துணிந்து "உனக்கு யோக்கியதை இல்லை" என்றும் சொல்லி விடுகிறார்கள். ஆகவே இம்மாதிரி காரியங்களை தான் உண்மையாய் நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லை என்றால் உங்கள் பேரால் உங்கள் பிரதிநிதியாய் இருந்து கொண்டு தானே செய்து வருகிறார்கள் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள். அவர்கள் இன்னம் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் ஆனால் உங்கள் பிரதிநிதிகள் அல்ல என்பதை நீங்கள் இனி வரும் தேர்தல்களின் மூலம் மெய்ப்பித்துக் காட்டிவிட வேண்டும் என்பதும், மற்றும் மந்திரிகளின் யோக்கியதை அற்ற தன்மையையும் பார்ப்பனர்களின் கை ஆயுதமாயிருக்கும் தன்மையையும் விளக்கமாகவும் பார்ப்பனர் அல்லாதார் என்கிற பெயரால் மந்திரிகள் இருப்பதற்கு ஆக பார்ப்பனரல்லாதார் வெட்கப்படத்தக்கதாகவும் பேசினார். பின்னால் ஸ்ரீமான்கள் தமிழ் பண்டிதர் S. S. அருணகிரி நாதரும், J. S கண்ணப்பரும், T. V சுப்ரமணியம் பிள்ளையும், தக்கோலம் செல்வப்பனும் பேசி, நாயகர் முடிவுரையுடனும் மாசிலாமணி முதலியார் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் 10 மணிக்கு கலைந்து பேண்டு வாத்தியங்களுடனும் ஜாகைக்கு அழைத்துக் கொண்டுவரப்பட்டார்கள்.

மதிப்புரை.

திருவள்ளுவநாயனார் பஞ்சரத்தினம் 500

இந்நூல் இயற்றியவர் நமது திருக்குறளென்ற தமிழ் வேதத்தை மாந்தர் மயக்கத்தை யொழித்தல் பொருட்டு பெண்களும் பேதைகளும் எளிதிலுணர்ந்துய்யுமாறு வெளியிட்டருளியவரும், சாதிக்கொடுமைகளை வேரறக்களைய அனேகவாண்டுகளுக்கு முன்னமே உண்மைத் தத்துவமினை தெளிவுபடுத்த பாவருமெளிதிலுணர்ந்தொழுகுமாறு வேண்டிய நூல்களையியற்றியருளியவருமாகிய திராவிட வேதவேதாந்தங்களை திருக்குறள் மூலமாக வெளியிட்டவரும் நமது தமிழுலகுக்கு மூலபுருடராயும் விளங்குவோராகிய யாதொரு திருவள்ளுவ மூர்த்திகளால் அருளிச் செய்யப்பட்டது. இதில் மிகவும் அருமை வாய்ந்த ஔடதப்ரயோகங்களும், செய்திகளும் அதன் செயல்களுமடங்கிய மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களுடன் அடங்கியிருப்பினும் இது சில மோசமான நூல்களின் ஆதிக்கத்தாலிதுகாறும் வெளியாகாமலிருந்து வந்தது. சித்தர் நூல் பதிப்புக்கழகம் யோகானந்தாச்சிரமம் ஸ்ரீ ஷண்முகானந்த ஸ்வாமிகளால் குறிப்புரை முகவுரையும் எழுதி அச்சிட்டு வெளியாக்கப்பட்டு தமிழுலகுக்குபகரித்தருளினமைக்கு நாம மிக்க மகிழ்வெய்துவதுடன் ஒவ்வொரு சித்த வைத்யரும் இக்கையேட்டை வாங்கக்கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் வெளியிடுகிறோம். கிடைக்குமிடம்:—

அமைச்சர், சித்தர் நூல் பதிப்புக்கழகம்
யோகானந்தாச்சிரமம்,
வண்ணாரப்பேட்டை, சென்னை.

இதன் விலை ரூபாய் இரண்டேதான்.

'மாங்கல்யம்' அல்லது 'அதைப்பற்றி யோசி' என்னும் நூல் வரப் பெற்றோம். தற்கால நாடகமேடைகளின் குறைபாடுகளை நீக்கி அவற்றை சரியான நிலைக்குக் கொண்டுவர முயன்று வரும் திருவனந்தபுரம் ஸனாதன நாடக சாலையாரால் இந் நூல் வெளியிடப்பட்டுள்ளது. தற்காலத்து நம் சமூகத்திலுள்ள ஊழல்களை வெகு தெளிவாக இந்நூல் கண்டிக்கின்றது. பால்ய விவாகம், ஜாதிவித்யாசம், மடாதிபதிகளின் பயனற்ற, பொருளற்ற வெறும் பூஜை முதலியவைகள் முழுவதும் கண்டிக்கப் படுகின்றதோடு பாதிவிரத்தியத் தன்மையும் பொலிந்து காணுகிறது. படிக்கப்படிக்க இன்பமும், நல்ல படிப்பினைகளையும் உண்டாக்கும். இதுவரையில் வெளிவந்த நாடகம் போலல்லாது இது ஓர் புதிதான குடும்ப நாடகம்' இதன் விலை ரூ. 1. வி. என். இராமலிங்கையர் என்கொயர், ஸ்டேட்பூ ஜங்க்ஷன் திருவனந்தபுரம்' என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

காங்கிரஸ் பைத்தியம்.

மகாத்மா காந்தி அவர்களாலும், அவர் பேச்சைக் கேட்டு சிறைக்குச் சென்ற பதினாயிரக் கணக்கான தேசபக்தர்களாலும், ஒரு கோடி ரூபாய் செலவு செய்து பிரசாரம் செய்ததின் பலனாலும், பாமர மக்களிடையே காங்கிரஸ் என்கிற பதத்திற்கு நமது நாட்டில் ஒரு வித மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டதோடு, படித்த வகுப்பார்களுக்கு அதன் மூலம் உத்தியோகம் பதவி பட்டம் அதிகாரம் முதலியதுகள் கிடைப்பதற்கு இடம் இருப்பதால், அதனிடத்தில் ஒருவித பைத்தியமும் ஏற்பட்டிருக்கிறது. அதனாலேயே ஒரு கூட்டத்தார் காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு பிழைப்பதையும் மறைக்கமுடியாது. ஆகவே, காங்கிரசின் பேரில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருட்டு நம்பிக்கையில், அதனால் தேசத்திற்கும் தேசத்தின் பெரும்பான்மை மக்களான குடியானவர்கள், தொழிலாளர்கள், ஏழை மக்கள் முதலியவர்களுக்கும் ஏற்பட்ட கெடுதியையும், சிலருக்கு அதனால் ஏற்படும் ஆதிக்கத்தையும் பலத்தையும் வெளியில் எடுத்துச்சொல்லக் கூட பயப்படுகிறார்கள், யாராவது துணிந்து வெளியில் எடுத்துச் சொல்ல வந்தாலும் அது மிகக் கஷ்டமாக இருக்கிறது. அதாவது மத சம்பந்தமான புரட்டுகளை வெளியில் எடுத்துச் சொல்வது எப்படி மதத்துரோகமும் நாஸ்திகமும் ஆய்விடுகிறதோ, அது போல் காங்கிரஸ் புரட்டுகளை எடுத்துச் சொல்வது தேசத்துரோகமும் தேசாபிமானமற்ற தன்மையுமாக ஆகிவிடுகிறது.

அதற்கு பாமர மக்களிடை இருக்கும் செல்வாக்கைப் பார்த்தே காங்கிரஸ் யோக்கியதை அறிந்தவர்களும் மக்களை ஏமாற்ற காங்கிரசில் சேர ஆசைப்படுவதும் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுவதும் சகஜமாக நடந்து வருகிறது. ஏதோ சிலர் உண்மையிலேயே காங்கிரஸ் ஒரு தேசீய விடுதலை இயக்கம் என்பதாக எண்ணி அதனிடத்தில் பக்தி செலுத்த ஆரம்பிப்பதும் சகஜமாக இருக்கிறது. உதாரணமாக மதுரை மகாநாட்டில் கூட ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேர்ந்து விடவேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் வந்ததும் பலர் அதை எதிர்த்ததும், சிலர் அதை ஆதரித்ததும் விஷயாலோசனைக் கமிட்டியில் கலந்திருந்தவர்களுக்குத் தெரியும். எதிர்த்தவர்களில் யாரும் தங்களுக்கு சுயராஜ்யம் வேண்டாமென்றாவது அல்லது அன்னியர்களின் கொடுமையான ஆட்சியிலேயே இருக்க வேண்டுமென்பது அல்லது அவ்வித கொடுமையான ஆட்சிக்கு உதவி செய்யவேண்டும் என்கிற எண்ணமாவது இல்லாமல் காங்கிரசினால் தேசத்திற்கு எவ்வித பலனுமில்லாமல் இருப்பதோடு பலவித கெடுதி ஏற்படுவதையும் உத்தேசித்தும், பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு ஆகவே அதை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் காங்கிரஸ் ஏதாவது பலனளிக்கக்கூடியதாயிருந்தால் அது பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு ஆக்கமளிக்கக்கூடியது தான் என்றும் மனப்பூர்த்தியாய் உணர்ந்தே எதிர்த்தார்களே ஒழிய வேறில்லை. ஆதரித்தவர்களும் சிலர் உண்மையாய் அதனால் சுயராஜ்யமடையலாம் என்றும், சிலர் அதனால் ஏதாவது பாமர மக்களின் ஆதரவு அரசியலில் அதிகாரமோ பதவியோ அடையலாம் என்றவர்களுமே தவிர வேறில்லை.

ஆனாலும், அக்கூட்டத்தில் அத்தீர்மானம் தோல்வியடைந்து விட்டால் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி யாவரும் அத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

இப்போதும் ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள அநேகருக்கு காங்கிரசினிடத்தில் ஒரு பைத்தியமிருப்பதாகவே தெரியவருகிறது. அதாவது சமீபத்தில் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் பேசியிருக்கும் பேச்சிலிருந்து அறிகிறோம். இது அவரவர்கள் தனி அபிப்பிராயமாய் இருக்கலாமே தவிர கட்சி அபிப்பிராயமாயிருக்கும் என்று உறுதியாய்ச் சொல்ல முடியாது. இது போலவே சுயராஜ்யக் கட்சியில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் பலருக்கும் ஜஸ்டிஸ் கட்சியினிடத்தில் பக்தி இருக்கிறது. ஆனாலும் ஏதோ சில குறிப்பிட்ட தடைகள் இருப்பதாக கனவு காணுகிறார்கள்.

காங்கிரசில் சேர வேண்டுமென்கிற ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சிலருக்கும், ஜஸ்டிஸ் கட்சியில் சேர வேண்டுமென்கிற காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார் சிலருக்கும், மத்தியில் நாம் தடைக்கல்லாயிருக்கப் பிரியப்படவில்லை. காங்கிரசில் சேருவதென்பது உபயோகமற்ற காரியம் என்பதாக மாத்திரம் சொல்லுகிறோமே ஒழிய காங்கிரசில் சேருவதானால் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமென்றாவது காங்கிரஸ்காரர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேருவது தப்பிதம் என்றாவது நாம் சொல்லவில்லை. இரண்டிற்கும் இப்போது உள்ள கொள்கைகளின்படி இவர்கள் அதில் சேருவதானாலும் அவர்கள் இதில் சேருவதானாலும் ஒருவருக்கும் ஒரு விதபலனும் உண்டாகிவிடாது என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் காங்கிரசிலிருக்கிறவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தால் அவர்களை காங்கிரஸுக்கு வாரிசுதாரர்களான பார்ப்பனர்கள் தேர்தல்களுக்கு நிறுத்தமாட்டார்கள். "காங்கிரஸ் கமிட்டியும்" அவர்களை நிறுத்தாது. அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து காங்கிரசில் சேருகிறவர்களையும் தேர்தலில் நிறுத்த காங்கிரஸ் தலைவர்களான பார்ப்பனர்கள் சம்மதிக்கமாட்டார்கள். காரணம் கேட்கப் போனால் "வகுப்புச் சம்பந்தமான கட்சியில் நீ மெம்பராயிருக்கிறாய் அது தேச முன்னேற்றத்திற்கு விரோதம் ஆதலால் கூடாது" என்று சொல்லி விடுவார்கள். இதைச் சொல்ல பார்ப்பனர்கள் கூட தேவையில்லை. ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுகார், கல்யாணசுந்தர முதலியார், முதலிய பார்ப்பனரல்லாதார்களாலேயே சொல்லப்பட்டு விடும். ஏனென்றால், பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று ஏற்பட்டிருக்கும் கக்ஷிகள் எல்லாம், எல்லா வகுப்புகளுக்கும் சம சுதந்திரமும் வகுப்புவாரி உரிமையும் கேட்கிறது. இப்போதைய காங்கிரசோ இதை தேசத்துரோகமென முடிவு செய்கிறது. ஆகவே தேர்தல்களுக்கு நிற்க முடியாது. இப்போது காங்கிரசினிடத்தில் ஒரு சிலருக்கு (பெரும்பான்மையாய்ப் படித்த கூட்டத்தாருக்கு) மோகம் இருப்பது தேர்தலுக்கு நிற்கத்தானே அல்லாமல் வேறல்ல. அத்தேர்தலில் காங்கிரஸ் பேரால் நிற்க அனுமதி கிடைக்கவில்லையானால் பிறகு காங்கிரசில் சேருவதில் என்ன லாபம் இருக்கிறது? ஒரு சமயம் பார்ப்பனரல்லாதார் மொத்தமாய்ச் சேர்ந்து காங்கிரசைக் கைப்பற்றி விடலாம் என்பதாக வைத்துக் கொண்டாலும் "வகுப்புவாரி உரிமையும், சம சுதந்திரமும் தேசத்துரோகம்" என்று சொல்லும் பார்ப்பனரல்லாதாரும் அதற்குள் இருந்து கொண்டுதானே இருப்பார்கள். பார்ப்பனர்கள் வழக்கம் போல் இக்கூட்டத்தாரையும் ஆசிரம வாழ்வுக்குக் கொண்டவர்களையும் உபயோகித்துக் கொண்டு கலகம் செய்வித்துக் கொண்டுதானே இருப்பார்கள்?

சரி இந்த கஷ்டங்களை எப்படியாவது சரிப்படுத்திக் கொள்ளலாம் என்பதாகவே வைத்துக்கொண்டாலும், காங்கிரசில் சேராத ஜஸ்டிஸ் கட்சிக்காரர் ஒருவர் தேர்தலுக்கு நின்றால் ஜஸ்டிஸ் கட்சியார் யாரை ஆதரிப்பது? காங்கிரஸைச் சேர்ந்த ஜஸ்டிஸ் ஆசாமியையா? அல்லது சேராத ஜஸ்டிஸ் ஆசாமியையா?

இப்பொழுது முஸ்லீம் லீக் என்று மகமதிய சகோதரர்களுக்குத் தனியாய் ஒன்று இருந்தாலும் அவர்களுக்கு தனித்தொகுதி வகுப்புவாரி உரிமை இருப்பதால், காங்கிரசில் இருப்பதால், அவர்களுக்கு கஷ்டம் இல்லை. அவர்களுக்கு தனிப்புத் தொகுதி இல்லாதிருந்தால் முஸ்லீம் லீகுக்கும் பெரிய ஆபத்தாய்த்தான் ஆகும். ஆகவே எவ்வித தந்திரம் செய்தாலும் பார்ப்பனர்களை ஏமாற்றமுடியாது. உண்மையான நல்லெண்ணத்தோடு காங்கிரசில் சேர வேண்டுமென்கிற ஜஸ்டிஸ் கட்சியாருக்கும், ஜஸ்டிஸில் சேர வேண்டுமென்கிற காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியாருக்கும் நாம் ஒன்று சொல்லுவோம். அதாவது, எவ்விதமான அரசியல் அபிப்பிராயமுள்ளவர்களும், அதாவது அராஜகக்காரன் என்று சொல்லப்படுபவன் முதல், அரசாங்க சிப்பந்திகள் வரை சேரும்படியாக ஜஸ்டிஸ் கட்சியில் அதிலுள்ள அரசியல் திட்டத்தை எடுத்துவிட வேண்டும். ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரே நோக்கம்தான் இருக்க வேண்டும். சமத்துவம் சுயமரியாதை சகல வகுப்பார்களும் அவரவர்கள் உரிமையையும் பிரதிநிதித்துவத்தையும் அடைய வேண்டியது என்கிற கொள்கை மாத்திரம் இருக்க வேண்டும். ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் தேர்தல்களுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தக் கூடாது என்கிற நிபந்தனையும் இருக்க வேண்டும். வேண்டுமானால் காங்கிரசுக்குள் உள்ள பார்ப்பனரல்லாதார் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு கட்சியை ஏற்பாடு செய்து கொண்டு பார்ப்பனரல்லாதாருக்காக பிரதிநிதிகளை நிறுத்திக்கொள்ளட்டும். அப்போது இரண்டொருவர் போக மற்ற பார்ப்பனரல்லாதார் எல்லாருக்கும் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவதில் ஆக்ஷேபணை இருக்காது. நமது கட்சிக்கு விரோதம் செய்

இதன் தொடர்ச்சி 10-பக்கம் பார்க்க.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுமதானே.

குடி அரசு.

பிரபவ-ளூ சித்திரை மீ 5-உ

பார்ப்பனக் கொடுமைக்காக உயிர் விட்ட சுத்த வீரன்.

பார்ப்பன எஜமானன் கீழ் இருந்து வேலை பார்த்து வயிறு பிழைப்பதைவிட சாவதே மேல் என்பதாகக் கருதி ஒரு சுத்த வீரன் பாஷாணத்தைச் சாப்பிட்டு உயிர் விட்டுத் தனது சுயமரியாதையைக் காத்துக் கொண்ட செய்தியை வேறு பக்கம் பிரசுரித்திருக்கிறோம். இவ்வீரனை நாம் உண்மையான சுத்தாத் தோட்டமுள்ள சுத்தவீரனென்றே சொல்லுவதோடு, மனமாரப் பாராட்டுகிறோம். இவ்வீரனின் தியாகமானது பார்ப்பனல்லாத சமூகத்திற்காக இதுவரை பாடுபட்ட எல்லாப் பெரியார்களின் தியாகத்தை விட மிகப்பெரிய தியாகமென்றும், மற்றவர்கள் செய்த வேலைகளையெல்லாம்விட மிகப் பெரிய பலனை அளிக்கக்கூடியது என்றும் சொல்லுவோம்.

நாயர் பெருமானின பிராமணத் தியாகமும், தியாகராய பெருமானின் தன்னலமற்ற சேவையும், மற்றும் பலரின் சிறைவாசமும். இவ்வீரனின் தியாகத்திற்கு ஒரு வீசத்திலும் சமானமாகாதென்றே சொல்லுவோம்.

இதைப்பற்றி எழுதும்போது நமது உடம்பு சிலிர்த்துக்கொண்டே இருக்கிறது. பார்ப்பனரல்லாத மக்கள் இவ்வீரனைக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் கூட்டங்கள் போட்டு அவனைப் பாராட்டித் தீர்மானங்கள் செய்தனுப்ப வேண்டும். பார்ப்பனரல்லாதார் முன்னேற்றச் சம்பந்தமான ஒவ்வொரு சங்கத்திலும் இவ்வீரனின் உருவப் படத்தை வைக்க வேண்டும். உண்மையான பார்ப்பனல்லாதார் ஒவ்வொருவர் வீட்டிலும் இப்படங்கள் துலங்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் இவ்வீரனின் சுத்த வீரத் தன்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். ஒன்று பார்ப்பனீயக் கொடுமையிலிருந்து விலக வேண்டும், விலகமுடியாவிட்டால், உயிர் துறக்க வேண்டும் என்கிற மந்திரம் பார்ப்பனரல்லாத சமூகத்திற்குள் எங்கு பார்த்தாலும் முழங்க வேண்டும். உயிரை விட சுயமரியாதையே பெரிது என்பதை யாவரும் உணரும்படி செய்ய வேண்டும்.

இது சமயம் எத்தனை பேர்கள் நமது சுத்தவீரனைப் போல் உயிர் விட சம்மதமில்லாமலும் வெளியேறிப் பிழைக்க முடியாமலும் பார்ப்பனர்களின் கீழ் கொடுமை பட்டுப்படுகிறார்கள் என்பதை கணக்கிலடக்கக் கூடுமா? நாம் எறக்குறைய வாரத்தில் 3 அல்லது நான்கு நாள் வெளி ஊர்களில் சுற்றுப்பிரயாணம் போய்க்கொண்டு இருக்கிறோம். போகிறவூர்களிலெல்லாம் பார்ப்பனர்களால், பார்ப்பனீயக் கொடுமைகளால், நமது மக்கள் படும் கஷ்டங்கள் சகிக்க முடியாதபடி கேள்விப்படுகிறோம். பார்ப்பனர்களும் வரவர அதிகமான தைரியம் பெற்றுவிட்டார்கள் ஏனென்றால், எல்லாத் துறைகளிலும் பார்ப்பனர்களே ஆதிக்கம்பெற்றுவிட்டதாலும் நிர்வாக சபையில் பொறுப்புள்ள ஸ்தானத்தில் பார்ப்பனரே இருக்கிறபடியாலும், மந்திரிகளும் பார்ப்பனர்கள் காலைத்திறுத்தச் சொன்னபடி ஆடுகிறவர்களாயிருப்பதாலும், நம்மவரிலும் சிலரைத் தங்களுக்கு அடிமையாக்கிக் கொண்டதாலும், பயமின்றியும், கவலையின்றியும், தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்ள நம்மவர்களை சித்திரவதை செய்து வருகிறார்கள். ஒரு சிறு உதாரணமாக காம சமீபத்தில் கேள்விப்பட்ட ஒரு விஷயத்தைப் பொது ஜனங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறோம். அதாவது,

சென்னையில் வித்தியா இலாக்கா சம்பந்தப்பட்ட ஸ்தாபனமொன்றில் சமஸ்கிருத இலாகாவில் ஒரு பார்ப்பனரல்லாதார் சுமார் 9-வருஷமாக புரொபசராக இருந்து வருகிறார். அவர் சமஸ்கிருதத்தில் மிக்க பாண்டித்ய முடையவர். அப்படிப்பட்டவர் ஒருபரீட்சகராய் நியமிக்கப் பட்டார். தலைமை பரீட்சகரான ஒரு பார்ப்பனர் அவருடைய நியமனத்தை அடித்து விட்டு வேறு ஒரு பார்ப்பனரை நியமித்துக் கொண்டார். சிண்டிகேட் சபையார் என்கிற மேல் அதிகாரிகள் தலைமைப் பரீட்சகரின் உத்திரவை நிராகரித்து விட்டு, மறுபடியும் அந்த பார்ப்பனரல்லாதாரையே நியமித்தார்கள். அதன் பேரில் தலைமை பரீட்சைகரான பார்ப்பனருக்குக் கோபம் வந்து டை 9 வருஷ காலம் சமஸ்கிருத புரொபசராயிருந்த ஒரு பார்ப்பனரல்லாதாரை ஒரே அடியாய் அவர் புரொபசர் வேலைக்கே லாயக்கில்லை என்பதாகச் சொல்லிவிட்டுக்கு அனுப்பிவிட்டார்களாம், அல்லது அனுப்பப்போகிறார்களாம் பார்ப்பனீயக் கொடுமைக்கு இதை விட இன்னும் என்ன ருஜு வேண்டும்? இம்மாதிரி நூற்றுக் கணக்கான சம்பவங்கள் தினமும் நடைபெறுகின்றன. தவிர, சென்னை முனிசிபல் கார்ப்பரேஷனில் ஒரு பார்ப்பனரல்லாதார் கமிஷனராயிருப்பதினால் அங்குள்ள பார்ப்பன கவுன்சிலர்கள் எவ்வளவு அக்கிரமமாகவும் அயோக்கியத்தனமாகவும் நடந்து கொள்ளுகிறார்கள் என்பது பத்திரிகைப் பார்ப்பவர்களுக்குத் தெரியாமல் இருக்காது. இது வரை பார்த்தது ஒரு கவுன்சிலர் அவர்பேரில் நாணயக் குறைவு என்று சொல்லவே இல்லை. கார்ப்பரேஷனுக்கும் வருஷத்தில் 2, 3 லட்ச ரூபாயிக்கு மேலாகவே லாபம் செய்தும் வைத்திருக்கிறார். கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதை வெகுவாய் நிறுத்தி விட்டார் கவுன்சிலர்கள் கண்ட்றாக்டர்களிடம் லஞ்சம் வாங்குவதையும் நிறுத்தி குறைந்த விலைக்கு நல்ல சாமான்கள் கிடைக்கும்படியாகவும் டோல் முதலிய குத்தகைகள் முதலியவைகளில் உள்ள புரட்டுகளை நீக்கி அதிகத் தொகைக்கு அடைபடும்படியாகவும் செய்திருக்கிறார். இன்னமும் அவர் முனிசிபாலிட்டிக்கு செய்துள்ள சீர்திருத்தங்கள் சொல்லி முடியாது. இவ்வளவு நன்மைகள் செய்திருந்தும், அந்தக் காலமை இரண்டாயிர ரூபாய் சம்பளமுள்ளதாயிருப்பதால் அவரை டை முனிசிபாலிட்டியை விட்டு விலக்கி அந்த ஸ்தானத்தில் ஒரு பார்ப்பனரைக் கொண்டுவந்து வைக்கப் பார்ப்பனர்கள் செய்யும் முயர்ச்சி இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாததாயிருக்கிறது. மந்திரி பார்ப்பனர்களின் அடிமையாயிருப்பதால் அவர் மூலம் என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிந்து வெற்றி பெறுகிறார்கள். கமிஷனரும் மூட்டை கட்டித் தயாராய் வைத்துக்கொண்டே இருக்கிறார். மற்றபடி வெளிதாலுக்கா ஜில்லா போர்டு முனிசிபாலிட்டிகளிலும் பார்ப்பனரிக்கத்திற்கு அளவே இல்லை. மதுரை முனிசிபலில் சேர்மெனுக்கு மதுரை கவுன்சிலர்களால் பாசான தொகை கிரமப்படி சம்மதம் கொடுக்க விடாமல் அதை ஆக்ஷேபிக்கும்படி மந்திரியைப்பிடித்து உபத்திரவம் செய்து வருகிறார்கள். மந்திரியும் ஸ்வபுத்தி இல்லாமல் எழுதி எழுதி அடித்து அடித்து உத்திரவு போட்டு வருகிறார் சேலம் ஜில்லா போர்டு தேர்தல் நடக்கும் தினத்தன்று அதை நடக்கவிடாமல் செய்யக்கருதி மந்திரியைக் கொண்டு நிபந்தனைகள் காட்டி எலக்ஷனை தடை செய்தார்கள். போர்ட் பிரசிடெண்டு நிபந்தனையின்படி எலெக்ஷன் நடத்தியபிறகு கூட அந்தத் தேர்தலை ஒப்புக்கொள்ளச் செய்யாமல் அதை நிராகரிக்கும்படி. மந்திரி வீட்டில் போய் பார்ப்பனர்கள் உட்கார்ந்து கொண்டு அவர் கையைப் பிடித்து எழுதச் சொல்லுகிறார்கள். மற்றும் பல விஷயங்களில் ஹைகோர்ட்டு ஜட்ஜுகளை கலெக்டர்கள் முதலான பெரியவர்களிலும் சிலரை ஏமாற்றி பார்ப்பனரல்லாதாருக்கு என்னென்ன கெடுதிகளும் முட்டுக்கட்டையும் போட வேண்டுமோ அவ்வளவும் செய்து வருகிறார்கள். எப்படியாவது பார்ப்பனர்களின் மாய்கையில் சிக்க முடியாத யோசிப்பதை நம்மில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்கு இல்லை என்றே சொல்லலாம். இந்த பலக்குறைவையே நமது பார்ப்பனர்கள் மிகுதியும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். இவைகளையெல்லாம் யோசிக்கும் போது சுயமரியாதை உள்ளவர்களுக்கு மேல்கண்ட சுத்தவீரனின் உணர்ச்சிதான் தோன்றுமே அல்லாமல் வேறு ஒன்றும் தோன்றுவதற்கு இடமே இல்லை. ஆதலால் அவ்வீரனைப் பாராட்டி ஆங்காங்கு தீர்மானங்கள் செய்யவும், அவனது உருவப் படத்தை ஒவ்வொரு சங்கங்களிலும், வீட்டிலும் தொங்க விடவும், மறுபடியும் வேண்டிக்கொள்கிறோம்.

பழய கருப்பனே கருப்பன்

சென்னையில் இருந்து டாக்டர் வரதரா ஜுலு நாயுடுவால் வெளியிடப்போகும் "தமிழ் நாடு" தினசரிப்பத்திரிகை வெளியாகவேண்டும், வெளியாகவேண்டும், என்று எதிர்பார்த்தவர்களில் யானும் ஒருவன். அதனால் நமது சமூகத்திற்குகோ, நாட்டிற்கோ, பெருத்த அனுகூலம் ஒன்றும் ஏற்பட்டு விடாது என்ற முடிவு ஏற்கனவே இருந்தாலும், சுதேசமித்திரனால் நாட்டுக்கும் நமது சமூகத்திற்கும் ஏற்படும் கெடுதியையாவது கொஞ்சம் குறைக்காதா என்று எதிர்பார்த்தோம். கடைசியாக வெளிவந்தது. வெகு ஆவலாய்ப் படித்துப் பார்த்தோம். பழய கருப்பனே கருப்பனல்லாமல் வேறு ஒரு சங்கதியையும் காணோம். மறுபடியும் பார்ப்பனர்கள் காலுக்குள் நுழையும் தந்திரங்களே நிறைந்திருப்பதும் சுதேசமித்திரன் காலில் விழுந்து அதை ஆதரித்து அதனால் தான் வாழப்பார்ப்பதும் அல்லாமல் வேறொன்றையுங் கண்டு பிடிக்க முடியவில்லை. அதோடு வழக்கம் போல் ஜஸ்டிஸ் கட்சியைவதின் மூலம் பார்ப்பனர்களின் தயவைச் சம்பாதிப்பதில் கண்ணுங்கருத்துமாய்க் காணப்படுகிறது. உதாரணமாக இரண்டொரு விஷயங்களை மாத்திரம் எடுத்துக்காட்டுகிறோம். ஏனெனில், கோயமுத்தூரில் நாயுடு காங்பரன்சிலிருந்து இந்த விஷயம் எழுதிய கால் வரிவரியாய் எடுத்துக்கொண்டு விவகரிக்க எழுத நேரமில்லாமல் சுருக்கமாக எழுதுகிறோம்.

அதாவது, ஸ்ரீமான் நாயுடுகாருக்கு விளம்பரகாரர்களால் தங்கக்கிண்ணம் இனாமாக அளிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட கூட்டத்தில் ஸ்ரீமான் நாயுடுகார் பேசியதாக "தமிழ் நாடு" பத்திரிகையில் எழுதி இருக்கும் விஷயத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

"சென்ற ஒருவருஷகாலமாக நான் இருந்த இடம் தெரியாமல் ஒதுங்கி இருக்கிறேன்"

"ராஜீய விஷயத்தில் எனக்கு மற்ற தலைவர்களுக்கும் அபிப்பிராய பேதமிருந்ததால் நான் விலகி இருக்கிறேன்".

"ராஜீய விஷயத்தில் அபிப்பிராய பேதமிருந்தால்............அபிப்பிராய பேதமுள்ளவர்கள் சக்தி இல்லா விட்டால் விலகி இருப்பதே நலம்"

"ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகள் எனக்குப்பிடிக்கவில்லை ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியை நான் ஆதரிப்பதில்லை".

"திராவிடன் கொள்கைக்கும் எனது கொள்கைக்கும் அதிக வித்தியாசமுண்டு".

"சுதேச மித்திரன் பத்திரிகைக்கும் எனக்கும் ராஜீய விஷயத்தில் யாதொரு அபிப்பிராயபேதங்களும், கொள்கையில் வித்தியாசங்களும் கிடையாது. ஆனால், அவர்கள் என்னுடைய செய்திகளை வெளியிடாது அமுக்கி விடுகிறார்கள்"

"ஹிந்து பத்திரிகை மாத்திரம் என்னுடைய செய்திகளைச் சரிவரப் பிரசுரித்தது. மற்றபத்திரிகைகளை விட ஹிந்து பத்திரிகை தான் அக்காலத்தில் உண்மைப்பத்திரிகையாய் இருந்தது"

"தமிழ் நாடு ஆரம்பித்தது முதல்......... ஜஸ்டிஸ் கட்சியோடு போர் புரிந்து வந்தது"

"சுதேச மித்திரன் பத்திரிகைக்கு போட்டியாக நான் தமிழ் நாடு பத்திரிகையை ஆரம்பிக்கவில்லை"

என்பதாக எழுதியிருக்கிறது, இப் பிரசங்கத்தைப்பற்றி வரி வரியாக எடுத்துக் கொண்டு விவகரிக்கலாமானாலும், அவசரத்தில் இரண்டை மாத்திரம் எடுத்தெழுதி விவரிக்கிறோம். தலையங்கத்தைப்பற்றியும் அதிலுள்ள நோக்கத்தைப்பற்றியும் பிறகு எழுதலாம். சுதேசமித்திரன் ராஜீய விஷயமும் அதன் கொள்கைகளும் என்ன என்பதைப்பற்றி இதுவரை "தமிழ் நாடு" பத்திரிகை என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறது? அது தானா இப்போது "தமிழ் நாடு" பத்திரிகையின் கொள்கை? அப்படியானால் "தமிழ் நாடு" தினசரி எதற்கு? [illegible] ஒரு உபத்திரவம் போதாதா? அதே கொள்கையைப் பார்ப்பனரல்லாத பத்திரிகையும் பிரசாரம் செய்யவேண்டுமா? "சுதேச மித்திரன்" செய்யும் உபத்திரவத்திற்காவது ஜனங்கள் ஏமாறாதிருக்கவும் கெடாமல் இருக்கவும் கொஞ்சம் காரணம் உண்டு. என்னவென்றால், அது பார்ப்பனப்பத்திரிகை என்று சொல்லி விடலாம். அதே கெடுதியை பார்ப்பனரல்லாதார் பத்திரிகை என்று போவைத்துக் கொண்டு சுதேச, மித்திரன் கொள்கையை நடத்தி வந்தால் தேசத்திற்கும், சமூகத்திற்கும் எவ்வளவு கெடுதி ஏற்படும் என்பதை பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்கட்டும். டாக்டர் நாயுடு காரு தன் சங்கதியைப் பிரசுரிக்காததனால் மாத்திரம் சுதேசமித்திரன் நடவடிக்கை நாயுடு காருக்குப் பிடிக்கவில்லையென்றால் என்ன அருத்தம்? இவர் நடவடிக்கையை விளம்பரப் படுத்திக் கொண்டு வந்து விட்டால் "மித்திரன்" யோக்கியன் என்று தானே கருதுகின்றார் என்று ஏற்படுகிறதா? இல்லையா? ஆகவே, "தமிழ் நாடு" பத்திரிகை நாயுடு காரின் விளம்பரத்திற்கு மாத்திரம் வேண்டி ஏற்பட்டு விட்டதே தவிர, புதிதாய் எந்தக் கொள்கையையும் பரப்ப அல்லவென்பதும் விளங்கவில்லையா? இந்த ஒரு காரியத்திற்கா எத்தனை பேர் அந்தப்பத்திரிகை நடத்தப் பணம் கொடுப்பது? எத்தனை பேர் அதைப் பணம் கொடுத்து வாங்குவது? என்பதை யோசித்துப் பாருங்கள்.

தவிர, ஜஸ்டிஸ் கக்ஷியும் திராவிடன் பத்திரிகையும் இவருக்கு என்ன கெடுதி செய்தது?

ஜஸ்டிஸ் கக்ஷி கொள்கையை விட சுயராஜ்யக்கக்ஷி கொள்கையும், நாயுடுகாரின் "தேசியக்கக்ஷி" கொள்கையும் என்ன விசேஷமானது

அநியாயமாய் நாயுடுகார் ஒருவரின் சவுகரியத்திற்காக ஒரு பெரிய சமூக முன்னேற்றக்கக்ஷியை பலிகொடுப்பானேன்? அல்லது நாயுடுகார் சொன்ன எந்தக் கொள்கையை ஜஸ்டிஸ் கக்ஷி ஏற்றுக்கொள்ள மறுத்தது? அனாவசியமாய் ஜஸ்டிஸ் கக்ஷியை வைவதால் பார்ப்பனர்கள் மதிப்பார்கள் என்கிற காரணத்திற்காக முன்பின் யோசிக்காமலும் பத்திரிகையை உபயோகிக்காமலும் வைது விடுவது தானா தேசிய வீரர்கள் என்பவர்களின் கொள்கை?

சுதேசமித்திரனைப் பற்றியும், அதன் ராஜீய விஷயங்களைப் பற்றியும், அதன் இதர கொள்கைகளைப் பற்றியும், ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றியும் அதன் கொள்கைகளைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும், டாக்டர் நாயுடுகாரு இதற்கு முன் பத்திரிகையிலும் பிரசங்கத்திலும் எழுதியும், சொல்லியும் வந்ததெல்லாம் உலகத்தை விட்டு மறைந்து விட்டதா? பார்ப்பனரல்லாதார் கக்ஷியை வையாமல் அதற்குக் கெடுதி செய்யாமல் நாயுடு காரு தனக்காக என்ன செய்து கொண்டாலும் எந்தப் பார்ப்பனப் பத்திரிகையைப் புகழ்ந்தாலும், எந்தப் பார்ப்பனர் இடம் மன்னிப்பு கேட்டாலும் எவனைக்கெஞ்சி, எவன் காலுக்குள் நுழைந்தாலும், நமக்கு அதைப்பற்றி கவலையே இல்லை இதை பல தடவைகள் சொல்லியும், எழுதியும் இருக்கிறோம். ஆகையால் நாம் நமது கடமையைச் செய்யாமலிருக்க முடியவில்லை இதை எழுதுவதற்கு நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. நமது சொந்த கஷ்டத்திற்கு பயந்து கொண்டு சும்மா இருப்பது பயங்காளித்தனமாகுமென்று கருதியே இதை வருத்தத்துடன் எழுதுகிறோம்.

உண்மையான சுத்தவீரன்.

"பார்ப்பனர் கீழ் வேலை செய்வதைக் காட்டிலும் சாவதே மேல்"

செங்கல் பட்டு ஜில்லா பொன்னேரியில் காஞ்சிபுரம் ரிடையர்ட் சால்ட் சப் இன்ஸ்பெக்டருடைய குமாரரான பி. சுப்பிரமணிய முதலியார் என்கிற 22-வயதுள்ள ஒரு வாலிபர் ஒரு பார்ப்பனருக்குக் கீழ் இருந்து வேலை செய்வதைப் பார்க்கிலும் செத்துப்போவதே மேல் என்பதாகக் கருதி தன்னுடைய நண்பர் ஒருவருக்கு கீழ்க்கண்ட விதமாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் விஷ சம்பந்தமான மருந்தைச் சாப்பிட்டு விட்டு, உயிர் துறந்தார். அக்கடிதமாவது:—

பொன்னேரி லோகல் பண்டு ஆஸ்பத்திரி,
7—4—27.

அன்புமிக்க மாணிக்கம்!

இந்தமாதம் 8-தேதி எனக்கு குறிப்பிடத்தக்க ஒரு அதிர்ஷ்ட வசமான நாளாகும். அது என்னவென்றால் நான் இந்த உலகத்தையும், உன்னையும், எனது பந்துக்களையும், விட்டு சந்தோஷமாகவும், திருப்தியாகவும் பிரியும்நாளாகும்.

ஒரு பார்ப்பன எஜமானன் கீழ் இருந்து வேலை செய்ய இனி என்னால் முடியாது. பார்ப்பன எஜமானன் கீழ் வேலை செய்து ஜீவிப்பதைக் காட்டிலும், செத்துப் போவது மேலானதென்றும். புத்திசாலித்தனமான தென்றும், நான் தெரிந்து கொண்டேன்.

என்னுடைய பார்ப்பன எஜமானனுடைய பெயர் உனக்கு தெரிந்ததுதானே. அந்த

மாட்டின் லாடமும் குடித்தனக்காரர்கள் கவனிக்கவேண்டுவதும்

கைவல்ய சாமியார் எழுதுவது

இவை சாதாரண விஷயமென்று தள்ளாது சிறிது கவனத்தைச் செலுத்தும் படியாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது. குடித்தனக் காரர்கள் தொழிலாளிகளால் நடத்தப்படும் வேலைகள் அநேகம். தொழிலாளிகளுடைய ஆலோசனையிலும், அவர்கள் பழக்கத்திலுமே செய்யப்பட்டு வருகிறது. தச்சன், கொல்லன், கொத்தன், முதலிய தொழிலாளிகள் செய்யும் வேலைகளில் குடித்தனக்காரர்கள் அவர்கள் சொல்லுவதிலேயே பெரும்போக்காக ஏமாந்துபோய் விடுகிறார்களோ, அதுபோலவே மாட்டிற்கு லாடம் கட்டுவதிலும் நடந்து கொள்ளுகிறார்கள். எஜமான் லாடக்காரனைப் பார்த்து லாடங் கட்டியாச்சா? இரண்டு ஜோடி மாட்டுக்குக் கட்டினேன். குளம்பை வெட்டினையா? வெட்டினேன். சரிக்கானிக்கு வெட்டி லாடம் போட்டாயா? போட்டேன். இருபது நாள் கூட உன் லாடம் வருவதில்லையே! இந்தத் தடவை சரியாய் வருகிறதா? எஜமான் தன் ஆளைப் பார்த்து, சரியாய் அடிக்கிறானா? ஆமாங்கோ எல்லா லாடத்தையும் நன்றாய்ப் புது ஆணி அடித்தான். சரி என்னடாப்பா கூலி? இரண்டு ரூபாய், சரி இந்தா ரூபா போ. இப்படியே எவ்வளவு விலை உயர்ந்த மாடானாலும் லாடம் கட்டப்படுகிறது. இதில் முக்கியமான விஷயமொன்று கவனிக்க வேண்டும். அதாவது சிறிது நாட்களின் முன் இருந்தது போன்ற லாடமல்ல இப்பொழுது இருக்கும் லாடம். முன் லாடங்கள் குளம்பின் வெளிப்பக்கமும் கனத்தும் அதிலிருந்து உள் பக்கம் வரையில் வட்டமாகச் சிறுத்து ஒன்னரை இஞ்சி அகலத்திற்குக் குறையாமலும் குளம்பின் முன் பாகங்கள் வரையிலும் நீண்டு குளம்பின் பின் பாகத்திற்கும் போதுமான தட்டையாய் ஆணிகள் பள்ளத்தில் பதியும் படியாகவுமிருந்தன. இப்பொழுதிருக்கும் லாடத்தின் அகலம் ஒரு விரக்கடைக்கு மேலில்லை இரண்டு பக்கமும் ஒரே கனம் நீளமில்லை, அடிப்பக்கத்திற்கும் முன் பக்கத்திற்கும் போதுமான தட்டையில்லை ஆணி பள்ளத்தில் படிவதில்லை. இந்த லாடம் கட்டுவதால் மாட்டிற்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. குளம்பின் வெளி பாகத்தில ஒரு நூல் விட்டு குளம்பின் நடுவில் லாடம் கட்டுகிறபடி மாட்டின் முழு பாரத்தையும் குளம்பு தாங்கவேண்டியிருக்கிறது. லாடம் அகலமாக இருந்தால் குளம்பிற்கு கஷ்டமில்லை. பாரம் முழுவதும் லாடமே தாங்கும். ஒரு விரக்கடை லாடம் குளம்பின் மத்தியிலிருந்து பாரத்தைத் தாங்குவதால் குளம்பிற்கு கஷ்டமுண்டாகிறது. லாடம் ஒன்றிரண்டு நூல் உள் தள்ளிக் கட்டுவதால் லாடமில்லாத வெளிப்பக்க குளம்பிலே பாரமோ கல்லோ தாங்குவதால் குளம்பு பெயர்ந்து விடுகிறது. ஆணி படியாததினால் தேய்கிறவரையிலும் மாட்டிற்கும் கஷ்டம். முன் சில இடங்களில் தகடு லாடமாக உபயோகித்தார்கள் அப்பொழுதே அதைப் பற்றி அநேகர் ஆட்சேபனை செய்து அந்த வழக்கம் அநேகமாக நின்று போயிற்று. இப்பொழுது கட்டும் லாடத்தினால் மாட்டின் பலம் குறைகிறது. சுறுசுறுப்பு மங்கப்படுகிறது. அடிக்கடி மாட்டிற்கு கால் சுளுக்குண்டாகிறது. லாடத்தில் தப்பென்று நினைத்து லாடத்தைப் பிடுங்கி விட்டாலும் நொண்டுவது நிற்பதில்லை. அடிப்பவன் தப்பல்ல. லாடத்திலேயே தப்பிருக்கிறது. காலில் நீர் இறங்குவதற்கும் இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். மாடு புஷ்டியடைவதில்லை. நாம் காலிற்கு சரியாக இல்லாத செருப்பைப் போட்டு நடப்பதால், குதிவலியும் பாதத்தில் வலியும் உடனே தெரியாவிட்டாலும் அதிலுள்ள கெடுதல் பின்னால் தெரிகிறது. மாட்டிற்கு வரும் தொந்தரவுகளை அது தெரியப்படுத்த வாய் இல்லை நாமே யூகித்து உணரவேண்டும்.

பழய லாடம் போய் இந்த லாடம் உண்டானதற்கு காரணத்தை ஆலோசிப்போம். கொல்லன் பட்டரையில் இத்தனை ஜோடி லாடம் அடித்தால் இன்ன கூலி என்றிருக்கிறது. சாதாரண கொல்வேலை செய்யத் தெரிந்தவனும், லாடமட்டும் அடிக்கத் தெரிந்த பல ஜாதிக்காரனும் லாடம் அடிக்கிறார்கள். உருப்படியின் எண்ணத்திற்கு கூலிக் கணக்கானதினால் சிறிதாகவும் கனமில்லாமலும் அதிக எண்ணிக்கையை ஒப்பித்து கூலியை வாங்கிக்கொள்ளுகிறார்கள். கூலி கொடுப்பவனுக்கும் இரும்பு மிச்சம், இரண்டு ஜோடி லாடம், மூன்று ஜோடியாகிறது. தூக்கி எடைபோட்டு விற்பதால் வாங்குகிறவன் சிறு லாடத்தையே வாங்குகிறான் அதுதான் இடைக்கு அதிகந்தரும். இரும்பு கொடுப்பவன், லாடம் அடிப்பவன், லாடம் விற்பவன், லாடம் கட்டுகிறவன் இவ்வளவு பேரும் தங்கள் சிறு லாபத்திற்கு லாடத்தில் மோசம் செய்து லாடம் சிறுத்துப் போய்விட்டது. இவர்கள் செய்யும் புரட்டால் மாட்டின் கஷ்டமும், மாட்டையுடையவர்களின் நஷ்டமும், இவர்களுக்குத் தெரியாது. இதைப் பற்றிக் கவனமோ நினைவோ குடித்தனக்காரர்களுக்கில்லாமல் போனதால் அந்தப் புரட்டு சகஜமாகப் போய்விட்டது. இந்த காலத்தில் எதிலும் மோசடியே என்றாலும் இந்த மோசடி குடித்தனக்காரர்களின் ஜீவாதாரத்தை நசுக்கக் கூடியது. குடித்தனக்காரர்களின் செல்வத்தில் மாடே முதலானதால் இதை அவசியம் கவனிக்கவேண்டும். லாடம் கட்டுபவனிடம் வாயில் சொல்லிவிட்டாலே இது சரிப்பட்டுவிடாது. நீங்களே பழய மாதிரியான லாடத்தை அடிக்கும்படியான ஏற்பாடு செய்ய வேண்டும்.

சீனிவாசப் பிரபு என்பவர், என்னையும், மற்றும் உள்ள சிப்பந்திகளையும், பார்ப்பன ஆதிக்கத்திற்காக உழைக்கிற தேவநேசசாமி என்கிற ஒரு பார்ப்பனரை இஷ்டப்படியும், அவர் சொல்லுகிறபடியும் நடத்துகிறவராயிருக்கிறார். இதுவரை டாக்டர் நாயர், சர். தியாகராய செட்டியார் வ. ராமசாமி முதலியார், சி. நடேச முதலியார் முதலியவர்கள் பார்ப்பனக் கொடுமைகளை அடியோடு தொலைப்பதற்காக செய்து வரும் பிரயத்தனங்களைத் தப்பிதமென்று நினைத்திருந்தேன். ஆனால், இப்போது அத்தலைவர்கள் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சத்தியமானது என்பது என் விஷயத்தில் மிகவும் ருஜுவாகி விட்டது. பார்ப்பனர்களை வெறுப்பதாலாவது பார்ப்பனர்களின் கீழ் வேலை செய்யக் கூடாது என்று நினைத்து என் வேலையை ராஜினாமா செய்து விடுவதினாலாவது வேறு வழியில் இந்த நாட்டில் பிழைக்க முடியாதவனாயிருக்கிறபடியால் ஒரு கோப்பை பாலில் ஒரு அவுன்ஸ் ஹைட்ரோசியானிக் ஆசிடைக் (Hydro-Cyanic Acid) கலந்து சாப்பிட்டு உயிரை மாய்த்துக்கொள்வதையே விரும்புகிறேன். ஆகலால் நான் ஒரு உண்மையான பார்ப்பனரல்லாத உணர்ச்சி உடையவனாகவும் எனது பார்ப்பனரல்லாதார் சகோதர சகோதரிகள் பார்ப்பனக் கொடுமையிலிருந்து மீளுவதற்காக அப்பார்ப்பனக் கொடுமையை அழிக்க வேண்டியும், நான் பிராணனை விடுகிறேன். நான் செய்யும் இந்தக்காரியம் சரிதானே? இந்த விஷயத்தை மெயில் பத்திரிகையிலும் ஜஸ்டிஸ் பத்திரிகையிலும் பிரசுரிக்கச் செய்வதால் நமது சகோதரிகளையும் சகோதரர்களையும் பார்ப்பன சூழ்ச்சியில் சிக்கி ஏமாறாமலிருப்பதற்காக இருந்து தப்புவிக்க உதவுமென நினைக்கிறேன். உன்னிடத்திலும் என் அன்பு நிறைந்த சிநேகிதர் ஸ்ரீமான் சி. சி. மல்லிகாத் ஜெயின் இடத்திலும், எம். எஸ். எம். ரயில்வே பாக்காலா ஜில்லா இஞ்சினீர் ஆபீஸ் டைப் அடிப்பவரிடத்திலும் விடைபெற்றுக் கொள்ளுங்காலம் நெருங்கிவிட்டது இதோடு நான் நல் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். இனி நீ பார்க்க முடியாததான என்னுடைய கடைசி கையெழுத்து இது தான், என்னுடைய பிரேதத்தை பார்ப்பன தெருவுக்கு முன்னால் ஓடும் ஆரணி நதி மணலில் பார்க்கலாம்.

என்னுடைய சம்பள பாக்கியை நீ எனக்காக வாங்கி ஓட்டல்காரருக்கும் மற்றும் நான் கொடுக்கவேண்டிய கடன் காரருக்கும் கொடுத்துவிடு.

(ஒப்.) பி. சுப்பிரமணியன்.

(7ம் பக்கத் தொடர்ச்சி.)

யவும் சக்தி இருக்காது. அப்படிக்கில்லாமல், அதிலொருகால் இதிலொருகால் வைத்துக் கொண்டு தங்கள் காரியத்தையும் கெடுத்துக்கொண்டு பொதுக்காரியத்தையும் கெடுத்து 'தினம் ஒரு கட்சி மாறுகிறவர்" என்கிற கெட்ட பெயரை வாங்கி மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை என்றே சொல்லுவோம். வேறு ஒன்றும் வேண்டியதில்லை தேசத்திற்கு உண்மையான விடுதலை வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்களுக்கு காங்கிரசும் ஜஸ்டிஸ் கட்சியும் எல்லாம் ஒன்றுதான், ஒன்றாலும் பிரயோஜனமுண்டாகாது. ஒரே அடியாய் ஒத்துழையாமையை ஆரம்பிக்க வேண்டியது தான். ஒத்துழையாமைக்குத் தேசமும் தானும் லாயக்கில்லை என்று நினைப்பதானால், மக்கள் சுயமரியாதைக்கு உழைக்கவேண்டியதுதான். இரண்டையும் விட்டு விட்டு தேசம் தேசியம் என்று மக்களை ஏமாற்றுவதில் தாங்கள் மாத்திரம் பிழைக்கலாமே ஒழிய மக்களுக்கு யாதொரு பிரயோஜனமும் உண்டாகாது.

திதி கொடுத்தல்.

தேசத்தின் பெயரால் பிராமணர்கள் காங்கிரசு என்று பிராமணரல்லாதாரை அடக்கி வைத்திருப்பது போல மதத்தின் பேரால் திதி என்பதிலும் ஒரு சாரார் அடக்கி வைத்திருக்கிறார்கள்.

மக்களாகப் பிறந்த நாம் தெய்வம், விருந்து தென்புலத்தார் ஆகிய இவர்களை வழிபடவேண்டியது தான். ஆனால் அதில் அருத்த முடைத்தாயிருத்தல் வேண்டும். நாம் அருத்தமில்லாமல் செய்கிற அனேகங்களில் இத் திதி கொடுப்பது என்பதும் ஒன்றாயிருப்பதால் இக்கட்டுரையில் இதை மட்டும் ஆராயலாம்.

சர்வேஸ்வரனை அடைவதற்காக இந்தப் பூதவுடலைப் பெற காரணமாயிருந்த பெற்றோர்களை "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஆன்றோர் வாக்குப்படி அவர்கள் உயிருடனிருக்கும் போது அவர்கள் மனம் சந்துஷ்டி அடையும்படியாக திரிகரண சுத்தியாய் ஊழியம் புரிய வேண்டியது நமது முதற் கடமை. அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிய பின்னரும் "நன்றி மறவாமை"யைக் கடை பிடித்தும், நமது கண்ணுக்குத் தெரியாத ஆண்டவனை எப்படி பக்தி செலுத்துகிறோமோ அதுபோல் நமது பெற்றோர்களிடமும் பக்தியாயிருக்கவேண்டும் அப்படி நாம் பக்தியாயிருப்பதுடன் அவர்களைப் பெருமைப் படுத்தவும் வேறாயது ஒரு காலத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அந்தக்காலமும் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறந்து விடக் கூடியதாயிருக்கக் கூடாது; என்ற கட்டாயத்தின் பேரில் எப்படி ஒருவன் கோவிலைக் கண்ட மாத்திரத்தில், ஸ்வாமியின் பேரில் நினைப்பு வருகிறதோ அதுபோல் அந்த நாள் வந்தவுடன் பிதுர்க்கள் பேரில் ஞாபகம் வருகிறது. அதற்காகவே அவர்கள் இவ்வுலகை நீத்த தினத்தை பிதுர் நாள்கள் அதாவது திதி என்றும் வைத்திருக்கிறார்கள். அதோடு அப்பிதுர்களும் அன்னம் பிதுர்லோகத்தில் நம்மால் கொடுக்கப்பெறுகிற போஜனாதிகளை அருந்துகிறார்களென்பதாக ஒரு கற்பனை ஏற்படுத்தி, நமக்கு ஒரு வருடம் பிதுர்க்களுக்கு ஒரு நாள் என்பதாயும், ஆகையால் நாம வருடம் ஒருமுறை அவர்கள் பெயரால் செய்கிற அன்ன ஆகாராதி தர்மங்கள், அவர்களுக்கு தினமும் போய்ச் சேர்ந்து ஒப்புக் கொள்ளுகிறார்களென்றும், இன்னும் இதை எப்படி சில விஷயங்களையும், சுருதி ரூபமாய் எழுதி வைத்திருக்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை எவ்வளவு தூரம் உண்மையல்ல என்பதை நாம் ஆராயாமலே எப்படியும் இதன் மூலமாய் வருஷம் ஒரு தரமாவது சில ஆன்மாக்களுக்கு தன்னாலியன்றளவு தருமம் செய்ய வேண்டும்; தானம் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஒரு ஈயாப் பத்தனுக்குக் கூட ஏற்படுவதற்கு ஆதாரமாய் இருந்து வருவதால் இதை ஒருவாறு ஒப்புக்கொள்ள வேண்டியதென்றே வைத்துக் கொள்ளலாம்.

தற்கால வழக்கம்.

ஆனால் தற்காலம் அந்தத் திதி கொடுப்பதானது சுருதி, யுக்தி, அநுபவம் இதுகளுக்கு ஒன்றும் சம்பந்தமில்லாமல் நாம் செய்யவேண்டியதாய் ஏற்பட்டிருக்கிறது. பிராமணர்களில் முக்கியமாய்ப் படித்த வகுப்பினருக்கு, திதியின் பேரில் கொஞ்சமும் நம்பிக்கையே கிடையாது. ஆனால் திதி செய்விக்கிறவர்களாகிய தங்கள் புரோகிதர் பிழைப்புக்குக் காரணமாயிருக்கிற பிராமணரல்லாதார்களுக்கு நம்பிக்கை கெடாமலிருக்க வேண்டி அவர்களும் திதி யென்று பெயர் வைத்துக் கொண்டு [உண்மையாய் நம்பிச் செய்கிறவர்கள் சிலர்] போக பாக்கிப் பேர்கள் பார்ட்டிக்கோ வெளியூருக்கோ அல்லது இங்கிலீஷ்காரர்கள் டின்னர் பார்ட்டிக்கோ போகவேண்டியவர்கள் தங்கள் வீட்டிலிருக்கிற ஆள் காரனுக்கு அல்லது பந்துவுக்கு திதி செய்யும்படி தர்ப்பைப் புல்லினால் பவர் [அதிகாரம்] கொடுத்து விட்டுப்போய் விடுகிறார். [ஆனால் உண்மையாக நம்பிக்கையுள்ளவர்களும் இருக்கலாம்] பிராமணரல்லாதார் இதை நம்பி ஏமாந்து அவர்களும் திதி கொடுப்பதற்காக என்று சில பிராமணர்கள் வெகுபயபக்தியுடன் செய்கிறார்கள் அதாவது முந்தின நாளே பிராமணார்த்தத்திற்கு வரும்படி ஒன்றிரண்டு தங்களினத்தவர்களுக்கு சொல்லி விடுவார்கள் அவர்கள் திதியன்று காலமே முதல் உபவாசமிருந்து திதி கொடுப்பவர்களும் இவர்களை பிதுர்க்களாகவே பாவித்தது போல பாசாங்குடன் பாத பூஜை வகையறாக்கள் செய்து அவர்களால் ஆசீர்வாதத்தைப் பெற்று அறுசுவையோடு கூடிய அன்ன பலாதிகளை வேண்டியமட்டும் அதாவது அன்று மறுபடி இரவில் கூட கூடுமானால் ஒருஸ்பூன் சுக்குக் கஷாயம் மாத்திரம் செலுத்தலாமே தவிர வேறொன்றும் செலுத்தமுடியாதபடி போஜனம் செய்வித்து தாங்களும் உடனுண்டு சந்தன தாம்பூலாதிகள் முதலிய சோட சோபசாரம் செய்து அனுப்பு[illegible]ம். ஏன் இரவில் கூட சாப்பிட முடியாதபடி போஜன மிடுவதென்றால் நமக்கு ஒரு வருடம் பிதுருக்கு ஒரு நாள் என்று மேலே சொல்லியிருக்கிறபடியால் இரவில் வேறே பக்கம் சாப்பிடும்படியாய் விட்டு விட்டால் பிதுர்களுக்கு அரை சாப்பாடு போட்டமாதிரி யாகும். அதாவது நாம் ஆறு மாதம் அவர்களைப் பட்டினி போட்ட மாதிரி ஆகும். ஆகலால் தான் இதை எல்லாம் படித்து விட்டு தயவு செய்து சிரிக்காதீர்கள்.

நமது திதி.

ஆனால் நாம் எப்படி திதி கொடுக்கிறோம் என்பதை இனிக் கவனிக்கலாம். திதி வருகிற நாள் நமக்குத் தெரியாது. புரோகிதருக்கு சவுகரியமான நாள் ஒன்று வைத்துக் கொண்டு எட்டு நாளைக்குமுன் வந்து அவருக்கு அவசிய முள்ள சாமான்களுக்கு ஜாப்தா கொடுக்கிறார். நாமும் ஒன்று விடாமல் தயார் செய்கிறோம் அன்று தினம் நாம் மிகவும் பக்தியுடன் வீடு வாசல் சுத்தி செய்து பச்சை ஜலம் கூட சாப்பிடாமல் உபவாசமிருந்து புரோகிதர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுமே சாப்பாட்டுக்குப் பின் இரண்டு திதிஒரு கருமாந்திரம் மத்தியான சாப்பாட்டுக்கு பின் ஒரு திதி, ஒரு கருமாந்திரம் இதுகள் செய்து விட்டு நேரே வருகிறார். வரும்போது இரண்டு பிராமணர்கள் ஒரு வேலைக்காரனுடன் வருகிறார்கள். அவர் வந்து முதலில் வீட்டுக்கு புண்யாகவாசனம் செய்து மாவிலையால் ஜலம் தெளித்தபின் தான் அடுப்பு மூட்டுகிறோம். ஹா! ஹா!! என்ன பரிசுத்தம் அப்புறம் பெரிய பெரிய தலைவாழையிலையைப் பூராவும் விரித்து அதுகள் நிரம்பும் வரை அரிசி, பருப்பு, காய், இலை, நெய். தயிர், கடுகு, மிளகு, சீரகம் ஆகிய குடும்ப வாழ்க்கைக்கு என்ன என்ன உண்டோ அது பூராவும் படைத்து விட வேண்டும். இது தவிர இதற்கெல்லாம் தட்சிணையும் தவறக்கூடாது. வீட்டில் இனி ஒன்றும் இல்லை, கையில் இனி ஒன்றும் இல்லை என்று தெரியும் வரை புரோகிதர் விடுகிறதில்லை அப்புறம் இதுதானே! அதுதானே! என் குறைத்து விட்டீர்கள்! வந்தவர்கள் மனது திருப்தி அடைந்தால் தானே திதி செய்த பலன்" என்று முணுமுணுத்துக் கொண்டே ஒருவருக்கு அர்த்தமாகாத சமஸ்கிருதத்தில் மந்திரத்தைச் சொல்லி வலது கால் மண்டியிடு பூநூலை இப்படி திருப்பி போடு, அப்படித் திருப்பி போடு, திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்க சாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய் என்பதாக பல விதம் இம்சைகள் செய்வித்து கடைசியாக ஒரு தர்ப்பப்புல்லைக் கொடுத்து "சுவாமிகளே எனது சக்தி கொஞ்சம் பக்தி அதிகம். இதை ஒன்றை தாருகக் கொண்டு அனுக்கிரகம் செய்ய வேணுமாயும் சோட சோபசாரத்திற்கும் "தர்ப்பை பத்திராய நமஹ" என்று பில்லையும் வாங்கிக்கொண்டு மூட்டை கட்டிக் கொண்டு போய் விடுகிறார். சோடசோபசாரத்திற்கு ஒரு தர்ப்பையானால் அரிசிக்கும் பணத்திற்கும் ஏன் தர்ப்பையால் வரவு வைக்கக்கூடாது? ஆகையால் இது பொருள் பறிக்க ஏற்பட்ட வித்தை யென்பதும். இதையும் நாம் பூரணமாய் நம்பியே வருகிறோமென்பதும் தெரியலாம். இது எவ்வளவு அறியாமையென்பதை நாம் யோசிக்கவேண்டும். உண்மையில் நமக்கு பிதுர்க்கள் பேரில் பக்தி இருந்தால் அன்று பிராமணர்களானாலும் சரி, பந்துக்களானாலும் சரி, ஏழையானாலும் சரி, நம்மோடு கூட சமபந்தியாக பிராமணர்கள் மாதிரியே நம்மால் கொடுக்கப்படும் அன்னத்தை திருப்தியுடன் நம்மோடு சாப்பிடவேண்டும். இனி வேண்டுவதில்லை யென்று சொல்லுவது அன்னதானத்தினால் தான் முடியும். மற்றது போதும் என்று சொல்ல இடங்கொடாது. அதனால் தான் நாம கொடுத்த பதார்த்தங்களும், பணமும் போதாதென்று புரோகிதர் முணுமுணுக்கிறார். இவரே திருப்தியடையாவிட்டால் இவரை சிலர்களின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளுகிற நமது பிதுர்க்கள் எப்படி திருப்தியடையமுடியும்? அதனால் தான், பிராமணர்களுக்குள் அன்னசிரார்த்தம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குள் யாரும் ஏமாந்து அரிசி மூட்டை கட்டி விட மாட்டார்கள் தவிர, திதி கொடுப்பது ஒருவரைப்பார்த்து ஒருவர் செய்கிற கெட்ட வழக்கம் நமக்குள் அதிகரித்து வருகிறது. ஒருவர் தன் வீட்டில் ஒன்றிரண்டு பிராமணர்களைக் கொண்டு "திதி" செய்தால், இன்னொருவர் 24 பேர்களைக்கொண்டு "திதி" செய்கிறார். ஒருவர் உயிரோடு தாய் தந்தை இருக்கும்போது சாப்பாட்டுக்குக்கொடுக்காமல் கோர்ட்டில் ஜீவனாம்சப் பிராது போட்டு சேர்த்துக்கொடுத்து வந்தவர் செத்தபிறகு ராமேஸ்வரம் போய் நூறு பிராமணர்களுக்கு போஜனமும், வஸ்திரமும்கொடுத்து திதிசெய்கிறார் இது எந்த பிதுருக்கு எப்படி போய்ச்சேருகிறதென்று தெரியவில்லை. நிற்க, நாம் கொடுக்கிற பதார்த்தங்கள் புரோகிதர் மூலமாய் போய்ச் சேருகிறதென்று வைத்துக் கொண்டாலும் நாம் கொடுக்கிற பதார்த்தங்கள் அன்றைக்கே சமையலுக்கு உதவுகிறதில்லை மறுநாளோ அல்லது கானாநாளோ புரோகிதர் வீட்டில் சமையலுக்கு உபயோகப்படுகிறது அப்படியானால பிதுர்க்கள் அன்றையதினம் பட்டினி தானே. அப்போது நாம் கொடுத்தும் என்ன பலன்? அவர்களும் கோபிப்பார்களே. அதுமட்டுமல்ல. நாம் கொடுக்கிற பதார்த்தங்கள் மறுநாளாவது புரோகிதர் வீட்டிலாவது உபயோகப்படுகிற தென்பது நிச்சயமுண்டா? அது ஒரு சமயம் விற்பனைக்கோ அல்லது வேறெங்கேயோ போய் விட்டால் என்ன செய்கிறது? இவைகெல்லாம் போகட்டும். நம் பிதுர்க்கள் அனேகமாய்ப் பல் போயிருக்கும். அவர்களுக்கு எல்லாம் பச்சையாகவே அனுப்பினால் பசிக்கு எப்படி சாப்பிடுவார்கள்? இவைகளை சமைக்க பிதுர் லோகத்தில் அடுப்பு, நெருப்பு, தண்ணீர் இவைகள் எங்கே? யார் கொடுப்பார்கள்? நாம் புரோகிதருக்கு அவைகளைக்கொடுக்கவில்லையே. தவிர, விருத்தாப்பியதிசையில் இவர்கள் அங்கு சமையல் செய்து கஷ்டப்படுவதைக்கண்ட அன்ன சிரார்த்தம் செய்தவர்களின் பிதுர்கள் சிரிக்கமாட்டார்களா! பாலுக்காக பசு, சவாரிக்காக் குதிரை, அது மேய்கிறதற்காக பூமி. இவைகளை புரோகிதர் மூலமாக அனுப்புகிறோம்—இத்தனையும்

வந்து சேர்ந்ததாக ஒரு கார்டு கூட எழுதுவதில்லை. இவைகள் தெரிந்ததாலும் ஒருவரைப் பார்த்து ஒருவர் செய்வதேயல்லாமல் இதன் உண்மையை யோசிப்பதே இல்லை. இதற்கு ஒரு கதை உண்டு. ஒருவர் நெடுநாளாக திதி செய்து கொண்டு வந்தார். அவருக்குப் புத்திரன் இருந்தான். தகப்பன் திதி கொடுக்கும் போது திதிக்காக வைத்திருந்த நெய், பால், தயிர் இவைகளை அவ் வீட்டிலிருந்த பூனை சாப்பிட அடிக்கடி வந்து விடுகிறபடியால், அதை ஒரு கூடையில் மூடி வைத்து விட்டு திதி முடிந்ததும் திறந்து விட்டு விடுகிற வழக்கம். அவர் இறந்து போனவுடன் இதைப் பார்த்துக்கொண்டிருந்த அவரது மகனும் அடுத்த வருடம் திதி கொடுக்க வேண்டியது வந்து விட்டது. புரோகிதர் வழக்கப்படி ஜாபிதா கொடுத்தார். ஆனால் அதில் பூனை விஷயம் இல்லை. பிள்ளையாண்டான் ஒருவேளை அய்யர் பூனையைப் பற்றி மறந்து விட்டார் என்று நினைத்துத் தங்கள் வீட்டிலிருந்த பூனையும் எங்கேயோ போய்விட்டபடியால் இவர் பூனைக்காக ஊர் பூராவும் தேடி அகப்படாமல் அடுத்த ஊருக்குப் போய் ஒரு அருந்ததியார் வீட்டில் கைமாற்றாக ஒரு பூனைக்குட்டியை வாங்கி வந்து கூடையில் மூடிவைத்து விட்டு திதி செய்ய அய்யரிடம் வந்தான். அய்யர் பையனைப் பார்த்து ஏனப்பா அதிக நேரம் செய்து விட்டாய் என்று கேட்க பையன் சாமிகளே அது என் தப்பல்ல புரோகிதராகிய தாங்கள் தான் வேலையைக் கெடுத்து விட்டீர்கள். என்னவென்றால், தங்கள் ஜாபிதாவில் பூனையில்லை. அப்புறம் நான் நினைத்து இதைக்கொண்டுவர இந்நேரம் ஆகி விட்டது என்றானாம். அது போலவே ஒருவரைப்பார்த்து ஒருவரும், கொஞ்சமும் சுருதி, யுக்தி, அநுபவங்களுக்குப் பொருத்தமில்லாததான பல விஷயங்களில் வீண் செலவும், மூட நம்பிக்கையும் ஏற்பட்டு அடிமைத்தனத்திலிருந்து மீளுவதற்கு அசாத்தியமாய்ப் போய் விட்டது. ஆகையால் நாமும் திதி கொடுப்பதில் நம்பிக்கையுடையவர்கள் பிதுர் தினத்தன்று தங்கள் சக்திக்கேற்ப பந்துக்களையும், ஏழைகளையும் வரவழைத்து, பெரியவர்கள் பெயரால் சம்பிரமமாக அன்னமளிக்கவேண்டும். பிராமணர்கள் வந்து நம்முடன் சாப்பிடுவதாக இருந்தாலும் பிதுர்களாகவே நினைத்து அவர்களுக்கும் உபகாரம் செய்யவேண்டும். அப்படி நாம் செய்வதனால் நம் பிதுர்களுக்கோ, அல்லது ஆண்டவன் மாடுங் கோயில்களாக உபயோகப்படுத்திக்கொண்டிருந்த ஜீவன்களுக்குமோ அன்றைக்காவது நாம் செய்த தருமம் பலன் தரும். அதை விட்டு இப்போது நடக்கிறமாதிரி நாம் திதி கொடுப்பது ஏதோ ஒரு சம்பிரதாயமே ஒழிய வேறல்ல. இதனால் பிராமணரல்லாதார்களாகிய நாமும், புரோகிதர் வீட்டில் வளர்கிற ஆண்பிள்ளை ஏதாவது நல்ல தொழிலை மேற்கொள்ளுவதை விட்டு ஏமாற்றுகிற இத்தொழிலில் பிரவேசிக்க நேரிடுவதால் அவர்களும் மோசம் போகிறார்கள்.

ஈற்க, நமது சமூக மத விஷயங்களில் யுக்தி, அநுபவங்களுக்கு ஒவ்வாத விஷயங்களை சந்தேகமின்றி மறுக்கவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையானபடியால் இக்கட்டுரையை எழுதமுன்வந்தேன். இதைக் கண்ணுற்ற பெரியார்கள் இந்த விஷயங்களில் கொஞ்சமும் ஐயப்பாடு இல்லாமல் திடஞ் செய்யும் விஷயத்தை கிரமமென்பதாக "குடி அரசின்" மூலமாய் தெரிவிக்கும் பக்ஷத்தில் மிகவும் நன்றியறிதலுள்ளவனாக இருப்பேன்.

க. வா. வேங்கிடாசலம் பிள்ளை

நீலாசலந் தழீஇய,
குன்னூர்,

பாங்கர் ஸ்ரீமான் N. ராமசாமி பிள்ளையவர்கள்,

"குடி அரசு" பத்திரிகை, தாங்கிவரும் பெரிய விஷயங்களையும், பத்திரிகாசிரியர், ஸ்ரீமான், ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களின், அரிய சொற்பொழிவுகளையும், பார்வையிட்டு எழுதியனுப்பியது.

கடல்கிடக்கும் மகிதலத்திற் கண்கிடக்கும் பலர் மீது கருணை காட்டிக்
குடல்கிடக்குங் கருப்போலக் குணங்கிடக்குஞ் சீமானே, கோது பூத்த
அடல்கிடக்கும் பார்ப்பனர் அகங்கடக்கும் முளைபிடுங்கும் அண்ணல் நீயும்
உடல்கிடக்கும் உயிரேபோல் உரங்கிடக்கும் வீரமே யுவந்தாள் வாயே. 1.

முடியரசு புனைந்தாரே முன்வரினும் உண்மையிலை மொழியக் கூறுங்
குடியரசு பத்திரிகை குலவிவரும் பேரழகு குறித்தற் காமோ
படியரசு மன்னரெல்லாம் பார்த்துவப்பப் பார்ப்பனர் பகைத் தொடுங்க
மடியரசா யிருந்துவிளை யாடுமிந்தப் பத்திரிகை வளர்க மம்மா 2.

கோத்திரத்திற் றன்பெரிய னெனப்பொல்லா மொழிகூறிக் குவலயத்திற்
சூத்திரனென் றேசொல்லி வந்தபெருங் குசத்தனைத் துடைத் தொழித்தான்
பாத்திரமா யெல்லார்க்கும் பயின்றிருப்பான் வைதுயர் பறக்கடிப்பான்
நாத்திறமாய்ச் சபையேறி யிவன்போல நயந்துரைப்ப நவில்வா ருண்டோ 3.

பார்ப்பாருங் கேட்பாரும் பகைத்திருப்ப வீரமொழி பகர வல்லோன்
பார்ப்பாருங் குலத்துயர்வு பனுவல் தீங்குணங்கள் பகிர்ந்து சொல்வோன்
வேர்ப்பாரும் மனம்புழுங்கி வேறொரு மாற்றுரைப்ப வினையுஞ் சொல்வோன்
ஈர்ப்பாருஞ் சபைமுழுவி யெழுவாருந் தலைவணங்க இருந்து காண்போன் 4.

ஐயர்சீர் சாம்பெனத் தண்டபெனும் அவலப்பேச் சறுத்துடைத்தோன்
மெய்ந்நாக நம்மவரு நெறிபிடித்துப் போகப்ப விளைந்த சீரோன்
வையமே வாழ்த்தெடுப்ப வங்கத்துச் சிங்கமென மருமம்போ கொண்டோன்
தெய்வமே துணையாகச் செய்தவரும் பெரியசெயல் செயப்பற் கொன்று 5.

சுபம், சுபம்.

மதிப்புரை.

வாக்கிய சைவ பஞ்சாங்கம்

பிரபவ வருஷ வாக்கிய சைவப் பஞ்சாங்கம் ஒன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அது நல்ல காகிதத்தில் சுத்தமான எழுத்துக்களால் பிழையற அச்சியற்றி எல்லா சைவமதஸ்தர்களுக்கும் மிக்க உபயோகப்படும்படி திதிவார நக்ஷத்திரங்கள் யோகம் கரணம் முதலிய அங்கங்களுடனும், மகமதிய, ஆங்கில தமிழ் வருஷ மாதம் தேதிகளுடனும், ராசியின் இருப்புகளுடனும், கிரகங்களின் சாரங்களுடனும் முகூர்த்தாதிகள், தேவாலய உத்சவாதிகள். நாயன்மார்களின் நக்ஷத்திர குருபூசை முதலிய இன்னும் மற்ற இன்றியமையாத விஷயங்களோடும் பிரசுரிக்கப்பட்டிருப்பதால் இதை ஒவ்வொரு சைவர்களும் அவஸ்யம் வாங்கி உபயோகிக்கத் தக்கதாகும்.

இதன் விலை அணா 0—2—0.

கிடைக்குமிடம்,—

சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை அல்லது திருநெல்வேலி.

பார்ப்பனியம் ஒழித்த ஸ்ரார்த்தம்.

வந்தவாசி தாலூகா வல்லம் கிராம போர்டு எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர் திருவாளர் டி. ஆர். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் சென்ற 9—4—27 தேதி சனிக்கிழமை தன் தகப்பனாருக்குச் செய்ய வேண்டிய வருஷாந்திர ஸ்ரார்த்தத்தை பிராமணரல்லாதாரைக்கொண்டு தேவாரம் திருவாசகம் படிக்கப்பட்டு, ஸ்ரார்த்த சடங்குகளைச் செய்து வேளாள குல நண்பர்களுக்கும், சைவகுலத்தவர்களுக்கும், ஊரிலுள்ள வைணவ பெரியவர்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் போஜனமளித்து அவ் வைபவத்தைச் சிறப்பாக நடத்தியுள்ளார். அவ்வாறே இனி இத்தாலுகாவிலுள்ள கனவான்களும் தம் தம் குலத்தவரைக் கொண்டு நடாத்தி தென்புலத்தார்களுக்கு பாத்திரமாக வேண்டிக்கொள்ளுகிறேன் என வல்லம் தமிழ் அபிமானி ஒருவர் எழுதுகிறார்.

ஸ்ரீமான் நாயக்கர்.

ஈரோட்டிலிருந்து 15-தேதி காலை மெயிலில் புறப்பட்டு கோயம்புத்தூர் நாயுடு மகாநாட்டுக்குப் போயிருக்கிறார். திங்கட்கிழமை வாக்கில் ஈரோடு வந்து சேருவார்.

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

தை நான் சொல்லவும் போவதில்லை. நீங்களே தீர்மானியுங்கள். மந்திரி சொன்னதாவது:—"மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் வாயின் மூலமாய்ப் பிறந்த கருணை வெள்ளம் கடவுளின் கட்டளையின் காரணார்த்தமாகத் தான் நாங்கள் மந்திரிகளாயிருக்கிறோம்" இது தான் சட்டசபையில் வீற்றிருக்கும் மகாஜன சபையின் பிரதிநிதிகளினால் மந்திரிக்குள்ள மதிப்பாகும்.

இந்த அடாத வார்த்தைகளுக்கு கண்ணியம் வாய்ந்த சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. அக்காட்சி மானிடர்களால் பார்க்கத்தகுந்ததன்று தேவகணங்கள் காணத்தகுந்த காட்சியாகும்! (சிரிப்பு) அவர்கள் கடைசியாக செய்த முடிவென்ன? இரகசிய கூட்டங்கள் கூடினார்கள். நடவடிக்கைகள் பொது ஜனங்கள் அறியக்கூடாதாம்? முடிவில், ஆணுமல்ல பெண்ணுமல்ல அலிகளாக இருந்துவிடலாம் என்ற நன்மை நல்க நடுநிலைமை என்ற முடிவுக்கு வந்தார்கள். நம்பிக்கை இல்லாத் தீர்மான நாளன்று சுயராஜ்யக் கட்சிக்காரர்கள், வாடிய முகத்தினராய்த் திருடனைத் தேள் கொட்டியது போல் சட்டசபையில் நுழைந்தார்கள், தீர்மானம் ஓட்டுக்கு விடப்போகும் தருவாயில் சட்டசபையை விட்டு ஒவ்வொருவராய் வெளிக்கிளம்ப ஆரம்பித்தார்கள். அன்று அவர்கள் முகத்தில் கொஞ்சமும் தேஜஸ் என்பதே இல்லாமல் மங்கிக்கிடந்தது. ஜவாப்தாரித்தனம் இல்லாத தன்மையின் மூலம் பிறந்த அவர்களின் முக ஒளி அன்று கொஞ்சமும் இல்லை! (சிரிப்பு) அன்று அவர்கள் மந்திரி கட்சியார்களின் விதவைகளாக மாறிவிட்டார்கள். (பெருத்த கைத்தட்டல்) சுயராஜ்யக் கட்சி விதவைகளை அம்பலத்தில் இழுத்துவிட்டு, அவர்களின் உண்மையான தோற்றத்தை உள்ளது உள்ளவாறும், அவர்கள் மானங்கெட்ட வாழ்க்கையின் இழிதன்மையையும், அவ்விதவைகளின் வைராக்கிய வீண் டம்பங்களின் புரட்டுகளையும், விண்ணோரும் வேண்டுமளவும் வெறுத்துத் தள்ளி நகையாடச் செய்த பாக்கியம் எனது நண்பர் முனிசாமி நாயுடு அவர்களுடையதே. (கைத்தட்டல்)

சுயராஜ்யக்கட்சியாரின் உபதலைவரைப் பற்றி ஒரு வார்த்தை. இக்கட்சியார் தன் சிஷ்யர்களை விட தலைவர்கள் தான் அதிகமாயிருக்கின்றனர். தலைவர் ஒருவர், உபதலைவர் மற்றொருவர், இன்னும் எத்தனை உபதலைவர்கள் இருப்பாரோ நான் அறியேன். மந்திரிகளைப் பாதிக்கும் தீர்மானங்கள் ஓட்டுக்கு வரும்போது வெளியேறும் சுயராஜ்ய அங்கத்தினர்களின் தலைவராய் விளங்குபவர், அவர் தான் சத்தியமூர்த்தி அய்யர்.

சுயராஜ்யக் கட்சியிலுள்ள ஊமை அங்கத்தினர்களுக்கு ஒரு தலைவர். சுயராஜ்யக் கட்சியின் முடிவுகளைத் திருப்புவர்கள் ஒரு கட்சி. இதுவரையிலும் சுயராஜ்யக்கட்சியில் தோன்றியுள்ள எனக்குத் தெரிந்த சிறு சிறு கட்சிகள் இவைகள் தான்.

சுயராஜ்யக் கட்சியின் நிலைமை மிக்க பரிதாப நிலைதான். எல்லாவற்றிலும் கேவலமானது சத்தியமூர்த்தி ஐயரவர்கள் செய்யும் காரியங்களில் எப்பொழுதும் ஒரே மாதிரியாய் நடந்து கொள்பவராகிறார். (சிரிப்பு) ஒவ்வொரு முறையும் ஓட்டு மணி அடித்த உடனே வெள்ளை ஆடை அணிந்த மேற்படியார் சட்டசபையை விட்டு வெளிக்கிளம்பிவிடுவார். சத்தியமூர்த்தி தான் கழுத்தைச் சுற்றிப் போட்டிருக்கும் ஆடையை எடுத்து முக்காடு போட்டுக் கொள்வாரானால், பூர்ண விதவையாய்த் தோன்றுவார். (பெருத்த சிரிப்பு)

ஒரு காலத்தில் வெள்ளைத் தெரு வீரராயிருந்து "பின்னர் திருவல்லிக்கேணியிலுள்ள ஒரு சந்தின வீரராய் விளங்குகிறார். இவ்வீரரை ஒரு கண்காட்சி சாலையில் வைத்து அதன் கீழ் காலமெல்லாம் கர்ஜித்த சிங்கம், ஆட்டுக்குட்டியாய் மாறிய அதிசயம் காண்க" என்று விளம்பரப்படுத்தினால் நலமென்று நினைக்கிறேன். (பலத்த கைத்தட்டல்) சுயராஜ்ய வேதாந்தம், மாண்டுவிட்டது (கைத்தட்டல்) அது ஐந்து கஜமல்ல, பலகஜ ஆழத்தில் புதைக்கப்பட்டு பழங்கதையாய்ப் போய்விட்டது, அது புதைக்கப்பட்ட இடத்திலிருந்து, மிக்க சுத்தமான நம்பிக்கையானதும், மாயாஜாலங்கள் நீங்கினதுமான இராஜீய தத்துவம் கிளம்பப் போகிறது. அத்தகைய தத்துவம் நமக்கு உண்மைச் சுயராஜ்யக்கட்சி என்று திருவுடையாற் பூர்ப்புறத் தழுவிக்கொள்ளப் போகின்றது. (பலத்த கைதட்டல்.)

போலீசில் 20 வருடம் சேவித்ததின் பலன்.

ஈரோடு சர்க்கிள் பெருந்துறை போலீஸ் ஸ்டேஷனில் 919 பி. சி. சோலைசெட்டி 114 பி. சி. கே. கிருஷ்ணன் பி. சி. 563 நெ ஆகிய நாங்கள் மூவரும் டியூடி செய்து வந்தோம். 11—9—26 தேதி இரவு 7-மணிக்கு 1 லக்கமிட்ட என்னையும் 2 லக்கமிட்ட கிருஷ்ணன் நாயரையும், 3 லக்கமிட்டவரை முறையே காஞ்சிக்கோவிலுக்கும் இலையம்பாளையத்திற்கும் கம்பிளியாம்பட்டி பீட் நியமித்தார்கள். இதற்கு முன் அதாவது 31—8—26 தேதியில் காஞ்சிக்கோவிலுக்குப் பீட் போன 462 நெ. கான்ஸ்டேபிளையும், 3—9—26 தேதியில் பீட் போன 157 நெ. கான்ஸ்டேபிளையும் திருடர்கள் அடித்து இம்சை செய்துவிட்டதால் பின்னவர் ஒரு வாரம் ஆஸ்பத்திரியிலிருந்தார். இதை யுணர்ந்த நாங்கள் ஒருவராகப் போவதாயிருந்தால் எங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு துப்பாக்கி தோட்டா தரவேண்டும், இல்லாவிட்டால் கூட இன்னும் ஒரு கான்ஸ்டேபிளை நியமிக்கவேண்டும் என்று கேட்டோம். போலீஸ் கைட் 11 வது பிரிவின்படி 2 கான்ஸ்டேபிள் ஆயுதத்தோடு அனுப்பலாம் என்று இருந்தும் அப்படி அனுப்பவும் முடியாது என்று கூறி விட்டார்கள். சங்கூரில் சென்னிமலை சப் இன்ஸ்பெக்டரவர்களைச் சிலர் அடித்து இம்சை செய்தகாலமும் அப்பொழுதாயிருந்தபடியால் நாங்கள் பந்தோபஸ்தில்லாததால் போகவில்லை; இதற்காக 25—9—26 தேதி எங்களை சஸ்பெண்டு செய்ய சப் இன்ஸ்பெக்டர் வேதநாயகம் பிள்ளை அவர்களும், புரொபேஷனரி சர்க்கில் இன்ஸ்பெக்டர் வெங்கிடகிருஷ்ணய்யர் அவர்களும் சிபார்சு செய்தபடி சஸ்பெண்டு செய்தார்கள். பிறகு 2—11—26 தேதியில் எங்களுக்கு நாங்கள் சதிஆலோசனை செய்ததாக டிஸ்மிஸ் ஆர்டர் கொடுத்து விட்டார்கள். எங்களுக்குக் கொடுத்த அந்த டிஸ்மிஸ் ஆர்டராகிய 3096 நெ. டி. ஓ. விலேயே இரண்டு கான்ஸ்டேபிள்களை பீட்டுக்கு நியமிக்கவேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறார்கள். நாங்கள் செய்த பிசகென்ன? இதைத்தானே நாங்களும் வேண்டினோம். ஆகையால் முறையே 15-வருஷம் 19வது வருஷம் யாதொரு குற்றமும் இல்லாமல் நன்னடக்கையுடனும் மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்பட்டு இதையே நம்பி ஊழியம் செய்த எங்களுக்கு வேறு கதியில்லை. பெரிய குடும்பஸ்தர்களாகவும் வயதானவர்களாகவும் இருக்கிறபடியால் வேறு வேலைக்கும் அசக்தர்களாகி, சாப்பாட்டுக்கே திண்டாடிக் கொண்டிருக்கிறோம் ஆகையால் கவர்ன்மெண்டு மேலதிகாரிகள் மறுபடியும் கவனித்து நீதிவழங்குவார்களென்று நம்புகிறோம்.

குறிப்பு:— 20 வருஷகாலமாக போலீஸில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும், இதுவரை வேறு ஒரு குற்றமும் செய்யாதவர்களுமாகவும் இருக்கிறதாகச் சொல்லப்படும் இவர்கள் கிராம பீட்டுக்குப் போவதற்கு அந்த ரோட்டு பயப்படக் கூடியதாயிருப்பதால் சட்டப்படி உண்டான பந்தோபஸ்து, அதாவது துப்பாக்கி தோட்டா கேட்டிருந்தாலும், தனிமையாகப் போவது தற்சமயம் அபாயகரமானது என்று கருதி கூட மற்றொரு கான்ஸ்டேபிளையாவது அனுப்புமாறு கேட்டுக்கொண்டிருந்தாலும் அவர்களை திடீரென்று யாதொரு காரணமுங் காட்டாமல் குருவி தலையில் பனங்காயை வைப்பது போல அவர்கள் சதியாலோசனை செய்தார்கள் என்னும் ஒரு பெருங்குற்றத்தைச் சுமத்தி வேலையினின்றும் நீக்கிவிட்டார்கள், என்றால் என்னே அரசாங்கமுறையின் அநியாயம்! இருபது வருடங்களாக பாடுபட்ட இவர்களை நீக்கிவிட்டால் ஜீவனத்திற்கு என்ன செய்வார்கள்? எவ்வளவோ பெருங்குற்றங்கள் மன்னிக்கப்படும்போது இச்சிறு குற்றம் மன்னிக்கப்படாமல் போனால் நிர்வாகக் கொடுமை தான் என்னே! என்னே!!

ஆதலால் "சால் நியாயம், அபீலில் அதுவே காயம்" என்பது போலில்லாமல் ஏதாவது வழி இருந்தால் மேலதிகாரிகள் கவனித்து ஏதாவது வழிசெய்ய வேண்டியதற்கு இது தக்க கேசு என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப—ர்.)

சர்பத்சத்து

கோடை காலத்திற்கேற்றதோர் குளிர்ந்த பானம்.

ஒரு டம்ளர் சுத்த ஜலத்தில் 5 சொட்டு சர்பத்து சத்து சேர்த்தால் போதுமானது. குளிர்ந்த மணமும் மதுரமான ருசியையும் கொடுத்து தாகத்தை தணிக்கச் செய்யும். பழங்களின் சத்துக்களும், இனிப்பும் இதில் அடங்கியிருக்கின்றன. மற்ற பானங்களைவிட குறைந்த விலையுள்ளது. 50 வேளை உபயோகிக்கக் கூடிய புட்டி 1-க்கு விலை ரு. 1.

எசன்ஸ் காப்பி:— ஒரு டம்ளர் வெந்நீர் அல்லது பாலில் ஒரு கரண்டி எசன்ஸ் சேர்த்தால் நல்ல காப்பியாகி விடுகிறது. டிக்காக்ஷன் தயார் செய்ய வேண்டிய சிரமமில்லை. நினைத்த பொழுது காப்பி தயார் செய்து கொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

ராமய்யா எலெக்ட்ரோ கெமிக்கல் ஒர்க்ஸ்,
வீரவநல்லூர். (S. I. R)



நாகையில் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கும் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கருக்கும் நாகப்பட்டணம் மகாஜனங்களால் வரவேற்று உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்த காலத்தில் ஸ்ரீமான் G. V. நாயுடுவால் எடுக்கப்பட்ட படம்.

இடது பக்கம்:—கீழ்வரி ஸ்ரீமான்கள் K. துரைசாமி (ஆநிகிராஸிடர்) A. துரைசாமி பிள்ளை (மருத்துவ குலத்தவர்) S. ராஜகோபால் நாயுடு (நாகை தாலுகா போர்டு பிரசிடெண்ட்) A. T. பன்னீர் செல்வம் (தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்ட்) ஈ. வெ. ராமசாமி நாயக்கர், V. P. P. காயாரோகணம் பிள்ளை, T. அய்யாகண்ணு செட்டியார், V. P. G. முருகேசம் பிள்ளை.

நடுவரி:—தெரியவில்லை T. P. ஆறுமுகம் பிள்ளை, A. திருஞான சம்பந்தம், ரத்தினம் பிள்ளை, M. தண்டபாணி, L. நடராஜன், பார்த்தசாரதி, M. வீரப்ப செட்டியார், நடேசன், தெரியவில்லை, ராமசாமி பத்தர், முத்துசாமி, தெரியவில்லை.

மேல்வரி:— லக்ஷ்மண நாயுடு— காளியப்பன்—ராஜகோபால் பிள்ளை—தம்புசாமி செட்டியார்—மாரியப்ப பிள்ளை—மாணிக்கதாஸ்—சாமுவேல் பிள்ளை தங்கையா—கிருஷ்ண மூர்த்திராஜா—நாராயணசாமி செட்டியார்—திருவேங்கிடம் பிள்ளை—சவுரியராஜுலு நாயுடு—ரங்கராஜுலு—கோதண்டபாணி பிள்ளை

நியாயக்கட்சியின் வெற்றி

கோடாரிக்காம்புகளின் சூட்சி பலிக்கவில்லை பார்ப்பனரல்லாத வாலிபர்களின் ஊக்கம் வெற்றிபெற்றது.

அய்யரைவிட பிள்ளையவர்கள் பெருமிதமான ஓட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டார்

நாகை முனிசிபாலிட்டி 4-வது வார்டில் காலியான ஒரு ஸ்தானத்திற்கு தேர்தல் நடந்தது. அது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற தத்துவத்தில் ஜஸ்டிஸ் கக்ஷி சுயராஜ்யக் கக்ஷி என்கிற பேரால் நடைபெற்றது,

பார்ப்பனரல்லாதார் கக்ஷி சார்பாய் நின்றவரான் ஸ்ரீமான் சதாசிவம் பிள்ளையவர்கள். பார்ப்பனர்கள் சார்பாய் நின்றவர் சுயராஜ்யக் கக்ஷி தலைவர் ராவ் பகதூர் ஸ்ரீமான் கே. எஸ். வெங்கிட்டராமய்யர் ஆவார். தேர்தல் வெகு போட்டியாகவும், மும்முரமாகவும் நடைபெற்றது. ஸ்ரீமான் அய்யர் சுமார் 1000 ரூபாய் வரை செலவழித்தும் பெருமிதமான ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டார். அதாவது 208 ஓட்டுகளில், ஸ்ரீமான் பிள்ளைக்கு 153 ஓட்டுகளும் ஸ்ரீமான் அய்யருக்கு 50 ஓட்டுகளும் செல்லுபடியாகாதது 5 ஓட்டுகளுமாகக் கிடைத்தது. ஸ்ரீமான் அய்யர் பார்ப்பனரல்லாதாரில் இரண்டொருவரை சுவாதீனம் செய்துகொண்டு வேலை செய்தும் கடைசியாய் தோல்வியே அடைந்தார். பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தார்கள் ஸ்ரீமான் பிள்ளைக்கு உதவி செய்தது பாராட்டத்தக்கது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

—————

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் சங்கம்.

திரு பொ. திரிகூட சுந்தரம்பிள்ளை யவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அவர்கட்கு பின்வருமாறு எழுதுகிறார்.

மதுரையில் நடக்கப்போகும் தமிழ்நாட்டு காங்கிரஸ் மகாநாட்டிற்கு தெரிந்தெடுக்கப்பட வேண்டிய தலைவர் ஸ்தானத்துக்குப் பல அபேட்சகர்களில் ஒருவனாக என்னையும் மேடி மகாநாட்டு வரவேற்பு சபையார் தங்கள் சபையாருக்கு சிபார்சு செய்திருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிகின்றேன். அவ்விதம் அவர்கள் செய்ததற்காக அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன். ஆனால் அப்போது நான் காந்தி கதர் நிதிக்குப் பணம் சேர்ப்பதில் கவனம் செலுத்தி வருவதாலும் இனிமேல் கதர் விஷயத்திலேயே அதிகக் கவனம் செலுத்த உத்தேசித்திருப்பதாலும் மேடி அபேட்சகர் ஜாபிதாவிலிருந்து என் பெயரை நீக்கிவிடும்படி தங்கள் சபையாரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

2-ம் பக்கத் தொடர்ச்சி.

மாக்களிடத்திற் பதியவைத்து அவர்கள் மூலமாகவே வேதங்களை வெளிப்படுத்தியிருப்பார் என்று கொள்ள வேண்டுவதே மிகப்பொருத்தமாகத் தோன்றுகிறது. இவ்வாறு கொள்ளாமல் வேதங்கள் கடவுள் நேரிலேயே திருவாய் மலர்ந்தருளினார் என்றுவது அல்லது வேதப்பொருள்களைச் சொற்றொடர் மாலைகளாக ஏடு எழுத்தாணி கொண்டு எழுதி ஆக்கிப் புத்தக உருவில் அமைத்துக் கையில் எடுத்துக்கொடுத்து விட்டார் என்றுவது சொல்வது பல வினாக்களுக்கு இடம் தருகின்றது.

கடவுள் வேதங்களைத் தம் திருவாயினாற் சொல்லும் பொழுது கேட்டுக்கொண்டிருந்தவர் யாவர்? சொல்லும் பொழுது முழுவதையும் ஒரே முறையில் இடைவிடாது சொல்லிவிட்டனரா? கேட்டுக்கொண்டிருந்தவர்கள் கடவுள் சொன்ன முழு வேதத்தையும் ஒரே முறையில் வாங்கி உள்ளத்திலேயே அமைத்துக்கொண்டனரா? கேட்டுக் கொண்டவர்களே வழி வழியாக வாய் வழியாய் ஓதி வந்து பின் ஒரு காலத்தில் எழுத்துப்புத்தக உருவத்தில் அமைத்துக் கொண்டனரோ? முதன் முதல் ஆண்டவனிடத்தில் வேதங்களைக் கேட்கும் பொழுதே கேட்டுக்கொண்டவர்கள் ஏன் எழுதிக் கொள்ளவில்லை? அப்பொழுது எழுத்துக்கள் வரிவடிவத்தில் அமைக்கப்படாமல் ஒலி வடிவத்தில் மட்டுமே இருந்தனவா? ஒலி உள்ளவன்றே ஒலிக்கு வரிவடிவமும் உண்டென்று கொள்பவர் கருத்துக்கு வரிவடிவம் பின் வந்ததென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? இனிச் சொற்றொடர் மாலையாகவே கூறினர் என்று கேட்கவேண்டி வருகின்றது. ஏதாவது சொற்றொடர் மாலையாகவே கூறினர் என்றால் எந்த மொழியிற் கூறினர் என்று கேட்கவேண்டி வருகின்றது. ஏதாவது சொற்றொடர்மாலையாக கடவுள் சொல்லியிருந்தால் கேட்டுக்கொண்டவர்கள் எந்த மொழி தெரிந்தவர்களாக அப்பொழுது இருந்தார்களோ அந்த மொழியிலேதானே கடவுள் வேதங்களைச் சொல்லியிருத்தல் வேண்டும். கடவுள் தந்ததாக எடுத்துக்காட்டப்படுகிற இந்த நான்கு வேதங்களும் எந்த மொழியில் இப்பொழுது காணப்படுகின்றனவோ அந்த மொழி இப்பொழுது பேசப்படுகிற மொழியாகக் காணப்படவில்லையே. வேதத்தை ஓதி வந்தவர்கள் பேச்சு மொழி மாற்றமோ; அல்லது கடவுள் தந்த வேத மொழி மாற்றமோ, என்னென்று கூறுவது? மக்கள் பேச்சு மொழியிலேயே வேதங்களைக் கடவுள் அருளியிருக்கவேண்டுமென்பது உண்மையேயானால் வேத மொழியாகிய ஆரிய மொழியையே மக்கள் பேசி வந்தவர்களாக வேண்டும். பேச்சு வழக்கில் நின்று ஆரிய மொழி எப்பொழுது வீழ்ந்து விட்டதோ அப்பொழுதே மற்றொரு மொழி பேச்சு வழக்கிற்கு வந்திருத்தல் வேண்டும். பேச்சு வழக்கிற்கு வந்த மற்றொரு மொழியில் வேதங்களை ஏனோ மொழி பெயர்த்துக் கொள்ளவில்லை? அப்பொழுதும் கடவுளே ஒருவர் வந்து வேதங்களை மொழிபெயர்த்துக் கொடுத்தல் வேண்டுமென்று மக்கள் வாளா இருந்தனரா? அல்லது முதன் முதல் இறைவன் தந்த ஆரிய மொழியில் நின்றும் வேதங்கள் மாற்றிக்கொள்ளப்படாமல் மறைந்த மொழியாய்ப் புறத்தார்க்குப் புலனாகாமல் இருக்க வேண்டுமென்று வேதிய மக்கள் நினைத்தனரா? இறைவன் ஆரிய மொழியிலேயே வேதங்களைத் தந்தனரா என்று எண்ணுகிற மக்கள் ஆரிய மொழி பேச்சு வழக்கில் நின்றும் இறந்துபட நேர்ந்தனாலும் ஆரிய வேதம் எத்துணைமக்கட்குப் பயன்படும் என்று நினைந்தார்கள்? சில மக்களே வேதங்களைப் படித்துக்கொண்டு அவைகள் தம்மவர்க்கே உரியன வென்று தம் நலம் பாராட்ட முயன்று தங்கள் குறுகிய நோக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டதேயன்றி வேறென்னை? பல மக்கட்கும் வேதங்கள் பயன்பட வேண்டுமென்று நினைந்திருந்தால் பல மக்களும் பேசுவதற்கு இடையிலே ஏற்பட்ட பேச்சு மொழியிலே வேதங்கள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்பதில்லையோ? இவைகளையெல்லாம் கூர்ந்து நோக்குமிடத்து வேதங்களின் வரலாற்றின் உண்மையைப் பற்றியும், வேதங்கள் தங்கட்கே உரியன வென்று சொல்பவர்களின் குறுகிய நோக்கத்தைப் பற்றியும் ஐயுற வேண்டியதே ஏற்படுகிறது. பல நூற்றுக் கணக்கான பேச்சுமொழிகள் இருக்கின்ற ஒரு நாட்டில் பேச்சு வழக்கில் இல்லாத ஆரிய மொழியில் அறிவு நூல்களாகிய வேதங்கள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் இன்னதென்று அறியக்கூடவில்லை. வெவ்வேறு மொழிகள் பேசிவருகின்ற பல மக்களும் வேதநூற்பொருள்களை அறிந்துகொள்ளவேண்டாமென்று கருதியோ, அல்லது வேதங்களில் காணப்படுகிற கொள்கைகளும் கருத்துக்களும் எல்லாம் மக்கள் உணர்ச்சிக்கும் பொருந்துமாறு இல்லையென்பது கருதியோ, எல்லா மக்களும் பேசுகின்ற எல்லா மொழிகளிலும் குறித்த நான்கு வேதங்களும் அமைக்கப்படவில்லை. வேறுபாட்டின்றி எல்லா மக்களிடத்தும் இரக்கம் வைக்கும் ஒரு கடவுள் எல்லாமக்கட்கும் பயன்படாத அறிவு நூல்களை முன்னொரு காலத்தில் அமைத்தார் என்பது கடவுளின் இறைமைக் குணத்திற்கு இழுக்காகு மன்றோ? ஆகவே கட்டுப் பட்ட ஆற்றலுடைய மக்கள் நிலைக்குக் கட்டுப்படாத கடவுளை இறக்கி எல்லைக் குட்பட்ட அறிவும் பொருள்களை எங்கேயோ வாய்ப்பு பட்ட நான்கு வேதங்களைக் கடவுள் ஆரிய மொழியில் சொற்றொடர் மாலையாகப் பாடி ஒரு வகுப்பார்க்கே ஓதுதற்குரியன வென்று கொடுத்தும், மற்றைய வகுப்பார்க்கு அவைகள் உரியன அல்லவென்று ஒதுக்கியும் கடவுள் வேதங்களை அருளிச் செய்து விட்டார் என்று கூறுவது அறிவுடைய மக்கட்கு அழகு ஆகாதென்றே மொழிந்திடல் வேண்டும்.

முன்னுள்ள இயற்கை அறிவையே மக்கள் தகுதிக்கேற்ப அவ்வப்போது வளம் படுத்தித்தருதலும் தரும பொழுது வாய்ப்பட்ட ஆற்றல்களுக்குட்பட்டு ஏடு எழுத்தாணி கொண்டு மக்கட்கு எழுதத்தரவேண்டுமென்பதின்றி மக்கள் அறிவினுட் கலந்து உணர்த்துதலும், உணர்த்தும அறிவுரைகள் பெரு மக்கள் வாய் மொழியே வரவேண்டுதலும் உலகியல் முறையில் மக்களால் ஆய்ந்து வரப்படும் அரசியற சட்டங்கள் சிறப்பு நோக்கி அரசர் பெயரால் வெளிப்படுதல் போலக் கடவுள் அறிவிக்க அறியும் மக்கள் அறிவுரைகளும அறிவித்தற் சிறப்பு நோக்கி ஆண்டவன் உரைகளாதலும் அவ்வறிவுரைகளும் மக்கள் பேச்சு மொழியில் அமைந்து வரவேண்டுதலும் அவ்வாறு இல்லாது போதால் குறித்த நான்கு வேதங்களின் வரலாற்று முறையில் ஐயப்பாடுகள் பிறந்தாலும் கூடுமென்ன ஆராய்ந்து நோக்கத்தக்கன. இவைபோன்ற கருத்துக்கள் பெருமக்கள் ஆராய்ச்சிக்கு இலக்காக நிற்கின்றனவாகலான் இக்கருத்துக்களைப் பெருமக்கள் ஆராய்ந்து தத்தம் குறிப்புரைகளைப் பிறர்க்குப் பயன் படுமாறு வெளியிடுவார்களாக.

பார்ப்பனீயமொழிந்தசடங்கு—திருக்கொடுக்குன்றமென்னும்பிரான் மலைக்கடுத்த கடுக்குடிப்பட்டி ஸ்ரீமான் கலியாணி பிள்ளை அவர்களின் தாயாரின் உத்தரகிரியைப் பார்ப்பனரைக்கொண்டு நடத்தாமல், தனது சுற்றத்தவர் பலருடன் குளத்தில் நீராடி விநாயகரை வழிபட்டு அவண் குழுமியிருந்தவர்களுக்கு சர்க்கரைப்பொங்கல் முதலியன வழங்கி, பின் வீட்டிற்குச் சென்று தனது பசுவை சர்க்கரைகலந்த அரிசியைத் தின்னச் செய்தார். பின்னர் ஸ்ரீமான் கலியாணி பிள்ளை தன் தாயார் முத்தியடையுமாறும், தன் குடும்பம் நீண்டகாலம் வாழுமாறும் சிவபெருமானிடம் முறையிட்டுக்கொள்ளும் படியும் எல்லோரையும் வணங்கினர். இப்படியே கொட்டாம்பட்டியைச் சேர்ந்த சிறுகுடி வாசி ஸ்ரீமான் அழ. அருணாசலம் பிள்ளை அவர்களும தமது தந்தையின் கருமச் சடங்கை நடத்திவைத்தாரென ஸ்ரீமான் லெ. சுப்பய்யா பிள்ளை அறிவிக்கிறார்.

இந்து முஸ்லீம் கலகம் இருதரப்பிலும் காயம்.

சங்கராச்சாரியார் என்கிற ஒரு பார்ப்பன "சந்யாசி" சாமியார் திருநகருக்குள் மேளவாத்தியங்களுடன் ஊர்வலம் சென்றதில், மஜீத்துக்கு சமீபத்தில மேளவாத்தியம் வரும் போது மேளவாத்தியத்தை நிறுத்தும் படி முஸ்லீம்கள் கேட்டுக்கொண்டும் சாமியாரின் ஆள்கள் கேட்காமல் மேளம் அடித்ததால் இந்து முஸ்லீம்களுக்குள் கலகம் ஏற்பட்டு இருதரப்பிலும் சில நபருக்கு காயம் ஏற்பட்டதாம். இவ்விபரங்கள் சைபுல் இஸ்லாமிலும் காணப்படுகிறது.

குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

ஏஜண்டு தேவை.

நமது சேலம் ஏஜண்டு விலகிவிட்டதால் சேலம் டவுனில் சந்தாதார்களுக்குப் பத்திரிகை பட்டுவாடா செய்யவும், விற்பனை செய்யவும், சந்தாதார்கள் சேர்த்துக்கொடுக்கவும் ஓர் ஏஜண்டு உடனே தேவை. 15 ரூபாய் டிபாசிட் கட்ட வேண்டும். விருப்பமுள்ளவர்கள் 30-4-27-உக்குள் மனுச் செய்து கொள்ளலாம்.

மானேஜர்,
"குடி அரசு" ஆபீஸ்.

சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு.

நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அனேகருக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரி பார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அனேகர்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவென்ச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள் தயவுசெய்து இனிமேல் எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தா தொகையை மணியார்டர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

நமக்கேற்ற நவீனக நாவல்　　　நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அலாவாதிஷ்டம அறியலாமிதுகிஜம்,　　　அனந்த ரகசியம் அற்புத ஜோசியம்

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

இரங்கூன் இரகசியம். ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழே வைக்க மனமிராது. நாகரீகம், நவீனகம, புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்காரமமைந்தது. அறிவை விளக்கி அகமகிழச்செய்வது. மோசம் நாசம கம்பளி வேஷம் போடும் வயிற்றுப்பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்நிய தேச ஜீவனும்ச கஷ்ட நஷ்டத்தின் பலனை போதிப்பது. சதிபதிகளின் சமுசார வாழ்க்கைதனை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது. மனசஞ் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள் வழிபறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச்செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோ லெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0 வி. பி. தபால்செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,

கபால் பெட்டி P நெ. 1051, 63, 29-வது கல்லி, இரங்கூன்

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதிதர்ம பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரூ 1 வீதம் மொத்தம சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள

1-வது பிரைஸ் ரூ 3000, 2-வது பிரைஸ் ரூ. 1500, 3-வது பிரைஸ் ரூ 1000 4வது பிரைஸ் ரூ. 500, 5, 6-வது பிரைஸ் ரூ. ரூ 200.

100 ரூபாயில் 5 பிரைஸுக்கு ரூ. 500, ரூ. 50ல 20-க்கு ரூ. 1000, ரூ. 20ல 50க்கு ரூ. 1000, ரூ. 10ல 100க்கு ரூ. 1000, ரூ. 5ல 200க்கு ரூ. 1000, ரூ. 3ல 600க்கு ரூ. 1800, ரூ. 2ல் 2400க்கு ரூ. 4800. ஆக பிரைஸ 3381க்கு ரூ. 17500, புக 1500க்கு கமிஷன ரூ. 5000, குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ 1800 தனிப்பிரைஸ் ரூ. 1700, பண்டுக்கு ரூ 9000 ஆக ரூ. 33000.

1. (4—5—1927) பிரபவ-ஹு சித்திரை-மீ 22-உ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2. 33000 சீட்டுகளுக்குமேல் விற்பனையாகுமானால் ஈவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் ஈவுப்படி குறைக்கப்பெறும்.

3. 1-வது பிரைஸ் முதல் 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் சீட்டை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ஸ்ரீ ரூ. ஆ. முத்துசாமி நாடார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

ரூ. ஆ. முத்து நாடார், பத்திராதிபர்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்.
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

பெட்ரோமாக்ஸ் லைட்

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் சுர்டு. னி. தஞ்சாவூர்

இனாம்!　　　இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.